

# ரமணோதயம்

அக்டோபர் 2022
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



திரு. V. சுப்ரமணியன் (மணி அண்ணா)
(1939 - 2022)

உதயம் 22 ஓம் நமோ பகவதே ஶ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்

அக்டோபர் 2022

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஶ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஶ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2022


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | வேதாந்த விசாரம் - அத்தியாயம்-5 | ஏ.வி. ராஜகோபாலன் | 13 |
| 3 | ஔவைக் குறள் | விளக்கம்: ராம் மோஹன் | 25 |
| 4 | ஒரு முதலமைச்சரின் பக்தி - ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் | ரவீந்திர நாராயணன் | 31 |
| 5 | இனிவரும் திருநாட்கள் | | 36 |
| 6 | சரணாகதி | தீபா மகேஷ் | 37 |
| 7 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 41 |
| 8 | கனவும் பொருளும் | டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன் | 51 |
| 9 | "மணி அண்ணா" மணியெனப் புகழ்வதல்லால் மற்றுமொரு மொழிதல் உண்டோ | ஆகுரா | 59 |
| 10 | முருகனாரோடும் ஸ்ரீரமண பகவானோடும் தினம் தினம் | ரமண சுந்தரராஜன் | 66 |
| 11 | செய்திகள் | | 76 |

# ஆசிரியர் உரை

## அங்கும் இங்கும்

ரமணானுபவத்திலேயே கனிந்த கனகம்மாள் குறிப்பிட்ட நிகழ்ச்சி இது.

அவரது குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக காஞ்சி மடத்தை ஆஸ்ரயித்து வந்தவர்கள். கனகம்மாளுக்கோ தெய்வத்தின் வழிகாட்டல்படி ஸ்ரீபகவானிடம் ஆழ்ந்த ஈர்ப்பு இருந்தது. அவரது குடும்பத்தாருக்கு அது சம்மதமாய் இல்லை. எனவே அவரது பாட்டியார் அவரைக் காஞ்சி மஹாஸ்வாமியிடம் அழைத்துச் சென்று, அவரிடம் பேத்தியை ரமணாஸ்ரம ஸத்ஸங்கத்திலிருந்து விடுவித்து காஞ்சி மட பக்தர் குழாமில் சேர்த்து அருள வேண்டும் என வேண்டினார்.

காஞ்சி மஹா ஸ்வாமிகள் தனது கனிந்த குரலில் ஆணித்தரமாகக் கூறினார்:

“இங்கேயானால் என்ன? அங்கேயானால் என்ன?”

அதிலிருந்து கனகம்மாள் பகவானின் அத்யந்த சிஷ்யையாகப் பரிணமித்தார்.

அதேபோன்று 1947-ஆம் ஆண்டு அக்டோபர் இறுதியில் காஞ்சி மஹா ஸ்வாமிகள் திருவண்ணாமலை நகருக்கு அருகிலுள்ள பகுதிகட்கு விஜயம் செய்தார். அப்போது பகவானின் பக்தர் ஒருவர், இப்போது பகவானும், காஞ்சி ஸ்வாமிகளும் சந்திக்கும் வாய்ப்பு உள்ளதா? என்று வினவினார். பளிச்சென்று பதில் வந்தது, “இப்போதைக்குத்தான் சந்திக்க வேண்டுமா? நாம் எப்போது பிரிந்திருந்தோம், இப்போது சேர்வதற்கு?”

*இதுவே ஞானியர்தம் மனவிகாசம்.*

*திருவாய்மொழியில் பராங்குசர் கூறுவதுபோல, பரமாத்மா,*

*கரந்த சில் இடந்தொறும் இடம் திகழ் பொருள்தொறும்*
*கரந்து எங்கும் பரந்துளன் இவை உண்ட கரனே.*

*பொருள்: அதிஸூக்ஷ்மமாய் அற்பமான இடங்கள் தோறும் அவ்வவ்விடங்களிலே விளங்காநின்ற ஆத்மவஸ்துக்கள் தோறும் (வ்யாப்யவஸ்துக்களும் அறியாதபடி) மறைந்து எல்லாவிடங்களிலும் வியாபித்திராநின்றான் (யாவரெனில்) இவ்வஸ்துக்களை ஸம்ஹார தசையிலும் தனக்குள்ளேயடக்கி, தான் ஸ்திரமாயிருக்குமெம் பெருமான்.*

*அப் பரமாத்மாவே அனைத்துள்ளம்தொறும் நிரம்பிய பகவான் ரமணராக ஒளிர்கிறது.*

*"அரியாதி இதர ஜீவரது அகவாரிஜ குகையில் அறிவாய்ரமி பரமாத்துமன் அருணாசல ரமணன்" என்று விஷ்ணு முதல் ப்3ரஹ்மாதி3 பிபீலி காந்ததநுஷு ப்ரோதா ஜக3த்ஸாக்ஷிணீ என்று சங்கரர் மணீஷா பஞ்சகத்தில் கூறுவதுபோல், எறும்பு முதல் ப்ரம்மதேவன் வரை அனைத்து உள்ளத்திலும் நான் நான் என்று அதிர்ந்து கொண்டு இருக்கும் ஆத்மாவே அருணாசல ரமணன். இதை ஜகத்குரு போன்ற ஞானியர் அனைவருமே அறிந்திருந்தனர்.*

*எனவேதான், 1931-ஆம் ஆண்டு தொடக்கத்தில் சந்திரசேகர ஸரஸ்வதி மஹா ஸ்வாமிகளை சந்தித்த பால் பிரண்டனிடம் உனக்கு ஞானப் பாதையைக் காட்ட வந்துள்ள ஸத் யோகியர்கள் இருப்பினும், தலைசிறந்த மெய்ம்மையான யோகியான அத்வைத யோகத்தினையே போதிக்கும் உத்தம குரு ஸ்ரீ ரமணர் என்று எடுத்துக்கூறி ஸ்ரீ பகவானிடம் செல்ல பால் பிரண்டனை ஊக்கியவர் காஞ்சி மஹா ஸ்வாமிகள்.*

*The real yogi of the highest kind. He is the high mentor of it* எனத் தன்னை ஆற்றுப்படுத்தியதாக பால் பிரண்டன் கூறுகிறார்.

1944-ஆம் ஆண்டில் காஞ்சி ஸ்வாமி நிகழ்த்திய சொற்பொழிவில் நான்கு ஆச்ரமங்களுக்கும் அப்பாற்பட்டு அதியாஸ்ரமியாய் இருப்பவர்க்கு சம்பிரதாயக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. ஆனால் நிஜமாகவே அப்பேர்ப்பட்ட நிலையை அடைவது மிகவும் சிரமமானது. ஸ்ரீ ரமண மஹரிஷி போன்று ஒரு மஹாத்மாவால் மட்டுமே அதைச் சாதிக்க முடியும் என்றார்.

இந்தப் பரம ஞானியின் நோக்கில் உலகு எங்ஙனம் உற்பத்தியாகி நிலைபெற்று பின்னர் அழிகிறது? ‘ப்ரக்ஞானம்’ என்னும் பேரறிவே அதன் அதிஷ்டானம்.

உலகத் தோற்றத்தையும் நீடித்தலையும் அழிதலையும் பற்றி, பகவான் உள்ளது நாற்பது 7-ஆவது பாடலில் விளக்குகிறார்.

உலகு அறிவு ஒன்றாய் உதித்து ஒடுங்கு மேனும்
உலகு அறிவு தன்னால் ஒளிரும் — உலகறிவு
தோன்றி மறைதற்கு இடமாய்த் தோன்றி மறையாது ஒளிரும்
பூன்றமாம் அஃதே பொருள்.

இந்தப் பாடல் விளக்கும் உலகத் தோற்றம் இதுவே. நம் முன்னே காண்கின்ற உலகத் தோற்றமும், அதைக் காணும் மனமும் ஒன்றாகச் சேர்ந்து ஒடுங்கினாலும், உலகமானது அறிவினால்தான் பிரகாசிக்கின்றது. உலகமும் அதைக் காணும் மனமும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடம் அளித்து, தோன்றி மறையாமல் பிரகாசிப்பது எதுவோ, அதுவே நித்ய பரிபூரண பரம்பொருள் ஆகும் என்று பரம்பொருளின் நித்யத்துவத்தையும் உலக வஸ்துக்களின் நிலையற்ற தன்மையையும் விளக்குகிறார் பகவான்.

பகவானின் உபதேசத்தை எண்ணும்போது, யாக்ஞவல்கியருக்கு ஜனகர் கூறிய உபதேசம் நினைவுக்கு வருகின்றது.

அவனுடைய விளையாட்டு உலகை எல்லோரும் பார்க்கின்றனர். விளையாடுபவனைப் பார்க்கவில்லையே. உண்மையாகத் தோன்றும் பிரபஞ்ச வாழ்விலும், முற்றிலும் பொய்யான ஸ்வப்ன வாழ்விலும் ஜீவன் சஞ்சரிக்கிறான். இரு கனாக்கட்கும் இடையே மீன்கள் சஞ்சரிப்பதுபோல் ஜீவன் அவன் சஞ்சரிக்கின்றான். ஞானம் வந்தபின் அவனே எண்ணமற்ற ஸமாதி நிலைக்குச் செல்கிறான். விண்வெளியில் பறந்து களைத்த பட்சி இறக்கையை அசைக்காமல் பரப்பி கூட்டுக்கு மிதந்து செல்வது போன்றதாகும் இது. இந்த ஸமாதி நிலையே அலைகள் எழாத நிலை. இந்த நிலையில் தந்தை தந்தையல்ல. அன்னை அன்னையல்ல. உலகு உலகல்ல. தேவர் தேவரல்லர். வேதம் வேதமல்ல. தபஸ்வி தபஸ்வி அல்ல. கள்வன் கள்வனல்ல. இங்குப் புண்யமும் பற்றாது, பாவமும் பற்றாது. இதுவே துன்பம் அனைத்தும் அற்றுப் போனநிலை. இந்த ஆனந்தத்தின் ஒரு திவலைதான் இவ்வுலகில் பிராணிகள் அனைத்தின் ஆனந்தமும் என்கிறார் யாக்ஞவல்கியர்.

இதற்கு அடிப்படைத் தேவை, ஞானத்தினால் கர்மத்தை அழித்துக் கொள்ளுதல் ஆகும். ஞானத்தினால் கர்மத்தை கழித்துக் கொள்ளாதவன், அட்டைப்புழு புல்லின் நுனிக்கு வந்தவுடன் அடுத்த நுனியைப் பற்றிக் கொண்டு, தன்னுடலைச் சுருக்கி இழுத்துக்கொண்டு ஊர்வதுபோல் ஓர் உடலை விட்டு இன்னோர் உடலைத் தொற்றிக் கொள்கிறான். அவரவர் கர்ம வினைப்படி வெவ்வேறு உயர் லோகங்களைக் கடக்கின்றான்.

ஆத்ம ஞானம் பெற்றவனோ உடல் விழுந்தபின், பரப் ப்ரஹ்மத்தில் ஒன்றுபட்டு விடுகிறான். அவன் ப்ரஹ்மமாகவே இருந்து ப்ரஹ்மத்தில் ஐக்யமாகிறான்.

பாம்பு அதன் சட்டை கழன்று விழுவதுபற்றி எவ்வாறு அசட்டையாக இருக்குமோ, அப்படித்தான் ப்ரம்மஞானி தன் உடல் விழுவது பற்றிக் கருதுவான்.

இங்ஙனம் யாக்ஞவல்கியரால் உபதேசம் பெற்ற ஜனகரின் நெஞ்சத்தில் ஞானக் கனல் பற்றியதைப் பார்க்கிறோம்.

இந்த ஞானக் கனல் மூட்டப்படுவதையே தவம் என்கிறோம். அதில்கூட இராவணன், இரணியன் போன்றோர் செல்வத்தையும், பதவியையும் சுகபோகங் களையும் விரும்பிக் காம்ய தவத்தினைச் செய்கின்றனர். ஞானத்தையே நாடுவோர்க்கு இத்தகைய கோர தவம் தேவைப்படாது. நல்லோர் செய்யும் தவம் எல்லாம் நம்முள் உள்ள ஆத்மா தனக்கு ஸ்வபாவிகமான, தூய மனத்தில் தோய்ந்திருத்தல். மற்றவை எல்லாம் ஆசையின் பாற்பட்டு அலைதலே ஆகும்.

தவம்செய்வார் தம்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவம்செய்வார் ஆசை உட்பட்டு. (குறள் 266)

அதற்கு அடிப்படைத் தேவை புலனடக்கம். மனத்தைப் புலன் ஆசை இழுக்கும் வழி செல்ல விடாமல், தூய இதயம் சார்ந்து நெறிப்படுத்தலே தவம்.

இதிஹாசத்தில் யயாதி கூறுவதுபோல், ஆசையெனும் தீயில் எவ்வளவுதாம் நாம் புலன் அனுபவத்தைச் சொரிந்தாலும் அது ‘இன்னும் வேண்டும்’ வேண்டும் என்றே கேட்கும். ஆசைகளைப் பூர்த்தி செய்துவிட்டால் மனம் அடங்கும் என்று எண்ணுவது அறியாமையே.

கடோபநிஷத்தில் வரும் தேர் உவமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

*ஆத்மானம் ரதி$^{2}$தம் வித்$^{3}$தி$^{4}$ ஶரீரம் ரத$^{2}$மேவ து ।*
*பு$^{3}$த்$^{3}$தி$^{4}$ம் து ஸாரதி$^{2}$ம் வித்$^{3}$தி$^{4}$ மன: ப்ரக்$^{3}$ரஹமேவ ச ॥*
*இந்த்$^{3}$ரியாணி ஹயானாஹு: விஷயாம் ஸ்தேஷு*
*கோ$^{3}$சரான் ।*

*ஆத்மேந்த்[3]ரியமனோயுக்தம் போ[4]க்தேத் யாஹுர்*
*மனீஷிண: (I-III-3-4)*

*இந்த அற்புதமான உவமையில் மனித உடலை ஒரு ரதத்திற்கும், அதில் பிணைத்துள்ள ஐந்து புரவிகள் ஐந்து இந்திரியங்களுக்கும், மனது கடிவாளத்திற்கும், பகுத்து அறியும் அறிவு சாரதிக்கும் ஒப்பிடப்படுகிறது. ரதத்தில் அமர்ந்து செல்லும் தலைவன் ஆத்மாவுக்கு ஒப்பிடப்படுகிறது.*

*ரதத்தில் பிணைக்கப்பட்ட புரவிகள் பாதையில் செல்லும்போது சாலையின் இருபுறமும் வளர்ந்துள்ள புல் முதலிய உணவுப் பொருட்களைக் கண்டவுடன் அவற்றால் கவரப்பட்டு பாதை மாறி ஓடுகின்றன. சாரதி கடிவாளத்தின் மூலம் குதிரைகளை அங்கும் இங்கும் அலையாமல் கட்டுப்படுத்தினால் மட்டுமே தன் லட்சியத்தை அடைய முடியும். இந்த உருவகத்தின் மூலம் புலன்கள் மனம், மற்றும் புத்திக்கும் இடையே உள்ள தொடர்பை நிலைநாட்டி புத்தியின் மூலம் மனம் எனும் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து, இந்திரியங்கள் என்னும் குதிரைகளை அவற்றின் மனம் போன போக்கில் தறிகெட்டு ஓடாமல் கட்டுப்படுத்தி, ஆத்ம ஞானம் என்னும் லட்சியத்தை அடைய வேண்டும் என்று உபநிஷத் ஆசிரியர் கூறுகின்றார்.*

*புலனடக்கத்தைப் போலவே மற்றொரு முக்கியமான காரணி திடநம்பிக்கை. கடவுள்மீதும் குருமீதும் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை. கு3ரும் ஏவாபி4 க3ச்சேத் — குருவையே முற்றிலும் நம்பி ஞானமார்க்கத்தில் செல்லுங்கள் என உபநிடதம் கூறுகிறது. நம்பிக்கை அற்றவனுக்கு இவ்வுலகமும் இல்லை; பர உலகமும் இல்லை.*

*பகவத் கீதையில் கண்ணபிரானே கூறுகின்றான்:*

*அக்ஞஶ்சா ஸ்ரத்[3]த[3]தா[4]னஶ்ச ஸம்ஶயாத்மா விநஶ்யதி।*
*நாயம் லோகோஸ்தி ந பரோ ந ஸுக[2]ம் ஸம்ஶயாத்மன:*
*(4:40)*

*பொருள்: அறிவும் சிரத்தையும் அற்ற மூடன் நம்பிக்கை இல்லாமல் கேள்வி மட்டும் கேட்டுக் கொண்டு இருக்கிறான். நம்பிக்கை அற்றவனுக்கு இவ்வுலகமுமில்லை; பர உலகமும் இல்லை; இன்பமுமில்லை.*

பகவான் ரமணர் சர்வ வியாபி. யார் மனத்தே பகவானிடம் சரண் அடைந்து, அவரே கதி எனத் தாழ்கிறாரோ அவர்களை எல்லாம் புரந்தருள்வார் பகவான். அவரையே நம்புங்கள்.

அருணகிரிநாதர் முருகனின் கருணைத் திறம் பாடும்போது

செங்கேழ் அடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநல் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந்து எதிர்நிற்பனே.

என்பது அருணகிரியாரின் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட சொற்கள். இதுபோன்று நம்பிக்கை நாயகனாகத் திகழ்பவன் நமது பகவான். எல்லோருடைய இதயங்களிலும் நானே மெய்ப்பொருளாகப் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறேன். எவர் எவர் எவ்வுருவில் என்னை உபாசிக்கிறார்களோ அவ்வுருவிலேயே நான் அனுக்ரஹிக்கிறேன் என்று கண்ணபிரான் கூறுகின்றாரல்லவா?

பகவான் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

போலந்து நாட்டைச் சார்ந்த வாண்டா-டைனோவ்ஸ்கி என்னும் பக்தை – பின்னர் இந்து சமயத்தைச் சார்ந்து உமாதேவி என்று பெயர் பெற்றவர். ஒருசமயம் கந்தாஸ்ரமத்திற்குச் செல்லக் கடும் வெயிலில் மலைமீது ஏறினார். கடும் வெயிலில் நா வறட்சி ஏற்பட, எங்கும் தண்ணீரே இல்லை. உடனே தனது சத்குரு ஸ்ரீ ரமண

மகரிஷியின் நினைவு வந்தது. “பகவான் சர்வ ஸக்தி உடையவர் என்பது உண்மையானால், ஏன் இப்போது இங்குத் தோன்றி, என் தாகத்தைத் தணிக்கக் கூடாது?” என்று எண்ணினார். என்னே வியப்பு! மறுகணம் அங்கே பகவான் கமண்டல நீருடன் வந்து, உமாதேவியின் தாகத்தைத் தணித்தார்.

அதேசமயம், ஆச்ரமத்தில் பகவான் தனது தியான அறையில் எப்போதும்போல வீற்றிருந்தார் என்பதும் உண்மையே!

மற்றொரு சமயம் யூத இன அறிஞரான சுலைமான் கோஹன், பகவானின் சிறந்த பக்தர். ஒருமுறை பயிலும்போது, “எல்லாமே பகவானின் இச்சைப்படிதான் நடக்கிறது. என்ன முயன்றாலும் அதை நாம் மாற்ற முடியாது” என்பதைப் படித்தார். “அப்படியா, இறைவன் இச்சை இதுவானால் என்ன முயன்றாலும் அதை மாற்ற முடியாதா! இதைப் பரிசோதித்துப் பார்க்கலாமே!” என்று எண்ணி மாலை வேளையில் அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று அந்தக் குளத்தில் முற்றுமாகக் குதித்து விட்டார். சுற்றுமுற்றும் வேறு எவரும் இல்லை. கோஹன் மேலே வர எந்த முயற்சியும் செய்யாமல் உள்ளே மூழ்கிக்கொண்டே போனார். திடீரென குளத்தின் ஆழத்தில் இருந்து ஏதோ ஓர் சக்தி அவரைத் தானாகத் தள்ளியது. மீண்டும் இந்தத் தத்துவத்தை சரி பார்க்கலாம் என்று எண்ணி, மீண்டும் குளத்தில் குதித்து ஆழத்தில் மூழ்கினார். மீண்டும் அதே சக்தி அவரை மேலே தள்ளி, குளத்தின் வெளியே போகச் செய்தது. இங்ஙனம் மூன்று முறை கோஹன் முயற்சி செய்தபோது, மூன்று முறையும் அந்தக் கண்காணாத சக்தியால் அவர் வெளியே தள்ளப்பட்டு, காப்பாற்றப் பட்டார்.

இந்தத் தத்துவத்தில் கூறியிருப்பது உண்மையே! என்று மனதில் கொண்ட கோஹன், யாருக்கும் சொல்லாமல் ஆடை உலரும் வரை காத்திருந்து மாலை வேளை

*பகவான் சந்நிதியில் நடைபெறும் சத்சங்கத்தில் சேர்ந்து கொண்டார். தனது அநுபவத்தை யாருக்குமே அவர் சொல்லவில்லை. சிறிது நேரத்தில் அவர் பக்கம் திரும்பிய பகவான், பொதுவாகக் கூறுவது போல, "தெய்வ விஷயங்களில் நம்பிக்கை இன்றிப் பரிசோதனை செய்யக் கூடாது" என்றார். தமது அநுபவம் ஆஸ்ரமத்திலேயே இருந்த பகவானுக்கு எப்படித் தெரிந்தது என்று அதிசயித்த கோஹன் நல்லபாடம் குரு மூலமாகக் கிடைத்தது என்று எண்ணிக் கொண்டார். இதேபோன்ற அற்புத நிகழ்ச்கள் முருகனார், குஞ்சு சுவாமிகள், சுந்தரேச ஐயர் மற்றும் காவ்யகண்டர் போன்ற பல அடியார் வாழ்விலும் நடந்தேறியுள்ளதைக் காண்கிறோம். அதுவே ரமண வைபவம்!*

*மீண்டும் உமாதேவியைச் சந்திப்போம். தான் தியானத்தில் கண்ட ஈஸ்வர தர்ஸனத்தை எங்ஙனம் நிரந்தரமாக்குவது என்று வினவிய உமாதேவிக்குப் பகவான் பதிலளித்தார். பௌதிகச் சார்பியல் கொள்கை போன்று இந்த விளக்கம் அமைகிறது. "காலம் என்பதே நமது எண்ண ஓட்டத்தின் உருவாக்கமே. இறைவனிடம் முற்றிலும் சரணடைந்து, உன் ஆத்மாவையே அவனுக்கு அர்ப்பணமாக்கு. அவனுடைய தர்சனம் உனக்கு நிரந்தரமாகக் கிடைக்கிறதோ, அன்றி தோன்றி மறைகிறதோ அதை அவனுக்கு விட்டுவிடு. இதைவிடுத்து, நீ விரும்பும் போதெல்லாம் அவன் தோன்ற வேண்டும் என்று எண்ணினால் அது சரணாகதி அல்ல. நீ அவனுக்கு இடும் கட்டளை! இறைவனை நீ உன் கட்டளைக்குக் கீழ்ப்பணிய வேண்டும் என்று எண்ணுதல் தவறு. அது சரணாகதி அல்ல. என்று, எப்படி, எப்பொழுது உனக்கு அளிக்க வேண்டும் என்பதை அந்த இறைவனே அறிவான். எல்லாவற்றையும் முழுமையாக அவனிடமே விட்டுவிடு. உன் சுமைகளை அவனே தூக்கட்டும். பூர்ண சரணாகதிக்குப் பின் உனக்கு எந்த ஒரு கவலையும் இல்லை. எல்லாப் பொறுப்பும் முழுமையாக*

அவனுடையதே. இதுவே சரணாகதி. இதுவே பக்தி. அது செய்ய இயலாவிடின், இந்தக் கேள்விகள் எல்லாம் யாருக்கு எழுகின்றன என்று பார். உன் இதயத்தில் முற்றிலும் மூழ்கி, அங்கேயே ஆத்மாவுடன் ஒன்று. இந்த இரண்டு வழிகளில் ஏதேனும் ஒன்றை முழுமையாகப் பின்பற்றுக.

"ஒரு நெய்யப்பட்ட துணியை மட்டும் பார்த்து, அதற்கு ஆதாரமான பஞ்சினை எண்ணிப் பாராத ஒருவனைப் பற்றிச் சிந்திப்போம் அல்லது ஒரு சினிமாத் திரையில் ஓடுகின்ற சினிமாப் படத்தை மட்டும் பார்த்து, அதற்கு ஆதாரமான திரையைப் பற்றி எண்ணாத ஒருவனைப் பற்றிச் சிந்தி அல்லது ஒரு கடிதத்தில் உள்ள எழுத்துக்களை மட்டும் படித்துவிட்டு, அது எதன் மேல் எழுதப்பட்டுள்ளதோ அந்தத் தாளினைப் பற்றி எண்ணாதவனைப் பற்றிச் சிந்திப்போம்.

"நாம் காணும் பொருட்கள் யாவும் ப்ரக்ஞை உணர்வும், அதன் மாறுபாடான வெளித் தோற்றங்களுமே. ஒரு சாமான்ய மனிதன் உலகில் உள்ள பொருட்களை எல்லாம் பார்த்தாலும் அதன் அடிப்படையான ப்ரக்ஞை உணர்வை அவன் காணுவதில்லை. தன்னுடைய தன்முனைப்பை அப்படியே வைத்துக்கொண்டு, ஒருவன் 'நான் கடவுளைக் காண்பேன்!' என்றால் அது இயலாத காரியம். காண்பானும் காண்பொருளும் ஒன்றாக ஆக வேண்டும். உண்மையில் காண்பொருள் காண்பான் காணும் செயல் என்று தனித்தனியாக மூன்று இல்லவே இல்லை. அவை அனைத்துமே 'சிவம்' எனும் மூலப் பொருளால் ஒன்றாக இருக்கின்றன" என்று உமாதேவிக்கு விளக்கினார் பகவான்.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# வேதாந்த விசாரம்

## அத்தியாயம் - 5

## நூறு ஆண்டுகள்

**டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்**

ஆரவாரமான சென்னை நகரிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ளது அந்த வேதாந்த குருவின் ஆஸ்ரமம். அவர், இந்திய-மேற்கத்திய வேதாந்தங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பன்மொழி வித்தகர். சிஷ்யர்கள் மத்திய வயது கிரஹஸ்தர்கள்; ஆன்மீக நாட்டமுடையவர்கள்.

முந்தைய அத்தியாயங்களில் 'ஞானி யார்?' மற்றும் 'ஞானியின் சூழல்' என்ற விசாரம் நடைபெற்றது.

*சிஷ்யர்கள்:* பலதரப்பட்ட ஞானிகளைப் பற்றிப் பார்த்தோம். இவர்கள் எவ்வாறு இறைவனை உணர்ந்தார்கள் என்பதை விளக்க வேண்டுகிறோம்.

*குரு:* இது ஆராய வேண்டிய விஷயம். முதலில் ஆசையைப் பற்றிப் பார்ப்போம்.

ஆசை என்பது, இயற்கை மனித இனத்துக்கு அளித்த மிகப்பெரும் சாபம். எத்தனைப் பொருள் ஈட்டினாலும், ஆசை போவதில்லை. இதைப் பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை என நம் முன்னோர்கள் வகைப் படுத்தினார்கள்.

இவற்றுள் பொன்னாசை நம்மை அதிகம் பாதிக்கிறது. லட்சாதிபதி, கோடீஸ்வரனாக விரும்புகிறான். அவனுக்குத் தேவைக்கு மேற்பட்ட பொன்னும் பொருளும் கொட்டிக் கிடந்தாலும் மனம் திருப்தி அடைவதில்லை. மண்ணாசை என்பது பதவி, ஆளுமை போன்றவை. புகழையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

இவை இரண்டும் ஓரளவுக்கு நல்ல ஆசைகள்தான். அளவு கடந்து போனால் இவை மனிதனை வெறி கொள்ளச் செய்யக்கூடியவை.

ஆனால், இன்று அதிகமாகப் பேசப்படுவது பெண்ணாசைதான். பாலியல் பலாத்காரங்கள் பள்ளிக்கூடங்களிலும் அரங்கேறுவது மிகவும் கவலைக்கு இடத்தை அளிக்கிறது.

இந்த மூன்று ஆசைகளுமே மனிதனின் நிதானத்தைக் கடந்து நிம்மதியைக் கெடுக்கின்றன. முடிசூடிய சக்கரவர்த்திகளையும் மூலையில் கிடக்கும் ஆண்டிகளையும் ஒருசேரத் தாக்கும் வல்லமை படைத்தவை இவை.

பதினெட்டு புராணங்களில் ஒன்றான விஷ்ணு புராணத்தில் இதன் அழகிய விளக்கத்தைக் காண்கிறோம்.

**யத் ப்ருதிவ்யாம் வ்ரீஹியவம் ஹிரண்யம் பசவ: ஸ்த்ரிய; ।**
**ஏகஸ்யாபி ந பர்யாப்தம் ததித்யதித்ருஷம் த்யஜேத் ॥**

*(சுலோகம் 4-10-24)*

(பொருள்: உலகிலுள்ள அனைத்துப் பொன்னும் பொருளும் பசுக்களும் அழகிய பெண்களும் ஒருசேரக் கிடைத்தாலும், போதும் என்று தோன்றாது. இந்தப் பேராசையை விட்டுவிட வேண்டும்)

இந்த மனப்பான்மையை நீக்கு என்கிறது மேற்படி சுலோகம். இவ்வாறு பொன், பதவி, புகழ், பெண்டிர்

என்னும் இவற்றிற்காக எந்தக் குறுக்கு வழியையும் நாடத் தயாராகிறோம். மகிழ்ச்சியையும் அமைதியையும் இழந்து, நம் வாழ்நாளை நாம் வீணடிக்கின்றோம்.

இதைப் பல சமயங்களில் நாமே உணர்கிறோம். 'அறுபது வயது வாழ்ந்தேனே தவிர அதில் உருப்படியாக எதையும் செய்யவில்லை. ஆசைகளைக் கடக்க இயலவில்லை. துன்பம், பொறாமை, மன உளைச்சல் என்று எதிர்மறை எண்ணங்களிலேயே உழன்று கிடக்கிறேன்' என்ற தாபம் பலருக்கு உண்டு. அந்தச் சமயத்தில் பரம்பொருளைப் பற்றிய எண்ணம் தோன்ற ஆரம்பிக்கிறது.

இதுவரை நாம் எப்படி நாளைக் கழித்தோம் என்று கணக்குப் போடுகிறோம்.

மனிதருக்கு அதிகபட்ச ஆயுள் நூறாண்டுகள். அதில் பாதி காலம் உறக்கத்தில் போய்விடுகிறது. பல சமயம் நல்ல உறக்கமும் வருவதில்லை. குறிப்பாக நாற்பது வயதைத் தாண்டியதும் இந்தப் பிரச்சினை பலருக்கும் வருகிறது. மருந்து, மாத்திரைகளை நாடுகிறோம். நல்ல உறக்கம் என்பதே ஒரு சாதனையாகி விடுகிறது.

அது போகட்டும். மீதமுள்ள ஆண்டுகளையாவது உருப்படியாகக் கழித்தோமா? பார்ப்போம். குழந்தைப் பருவம் விளையாட்டில் கழிந்துவிடுகிறது. பின்னர் இளம் பருவத்தில் விஷய சுகங்களின் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்நிலையில் பெரும்பாலோருக்கு இறை நாட்டம் வராது; இது இயற்கை. அதில் கால்வாசி ஆயுள் கழிகிறது.

சரி. இந்தக் கால கட்டத்தில் வாழ்க்கையை அனுபவிப்பது என்பது சரிதான். மிச்ச காலம்?

இதுதான் முதிர்ச்சி வரும் சமயம். அநித்திய வஸ்துக்கள் அளிக்கும் இன்பம் தாற்காலிகமானது என்று தெளிந்து இறைவன் பக்கம் செல்லும் வாய்ப்பு

அமையக்கூடிய சமயம். ஆனால் இச்சமயத்தில் பழைய ஏமாற்றங்கள், பெற்ற அவமானங்கள் மற்றும் தோல்விகளை நினைத்து மன உளைச்சல் சிலருக்கு வரும். இன்னமும் பணம் சேர்த்திருக்கலாம் என்ற ஏக்கம் வரும். உடல் ஆரோக்கியம் குறையும். நோய், நொடி வந்துவிட்டால் நம் நாட்டம் நோயை நீக்குவதற்கான முயற்சிகளில் செல்லும். 'ஐயோ சாமி காப்பாத்து' என்று கதறத் தோன்றுமே தவிர பிரம்ம நாட்டம் வராது.

உடல் நோயையாவது குணப்படுத்தலாம்; ஆனால் பலருக்கும் இன்று வரும் மன அழுத்தம், டிப்ரஷன், தன்னிரக்கம் போன்ற நோய்கள் இந்தத் தலைமுறைகளின் சாபக்கேடு. சமகால லாப நோக்கம், போட்டி மனப்பான்மை போன்றவையால் கிடைத்த 'வரங்களே' இவை. இந்த மன நோய்களால் அவஸ்தைப்படுபவர்கள் சுய பச்சாதாபத்தில் தம்மை இழக்கின்றனர். 'விதி எனக்கு எதிராக வேலை செய்கிறது. ஆண்டவன் என் பக்கம் இல்லை' — என்ற எதிர்மறை எண்ணங்கள் இவர்களை குழப்பமடையச் செய்கின்றன.

இந்த மத்திய பிராயத்தில், காம - க்ரோத - லோப - மோஹ - மத - மாத்சர்யங்கள் என்னும் ஆறு சத்ருக்களுடன் போராடுவதிலேயே நம் நேரம் கடந்து விடும். ஆசை என்னும் அந்தத் தீராத வியாதி நம்மை ஆட்டிப் படைக்கும். அதனால் வரும் கோபதாபங்கள், பொறாமை, கர்வம், குழப்பம்..... அப்பப்பா சொல்லி மாளாது.

கடைசியில்.... வயதாகி இந்திரியங்கள் தளர்ந்து போகும் நிலையில் எதையும் சிந்திக்க முடியாத நிலை வரும்.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் நூறு ஆண்டுகள் போய் விட்டன. இறை சிந்தனை வந்தபாடில்லை. எதையாவது செய்து இனிப் பிறவியில்லாத ஒரு அருள் கிடைத்தால்?

*குரு:* இதைத்தான் அரங்கனைத் தவிர வேறு எந்த திவ்ய க்ஷேத்திர ஆண்டவனையும் பாடாத தொண்டரடிப்பொடி ஆழ்வார் 'திருமாலை' என்னும் நூலில் அழகிய பாசுரமாக அளிக்கிறார்.

*வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்*
*பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு*
*பேதை பாலகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்*
*ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே*

*(திவ்யப்பிரபந்தம், 874)*

பொருள் சுலபமாக விளங்கும். நூறு என்பதே அதிக பட்சம். அதை எட்டுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பலர் வாழ்வு முடிவது கண்கூடு. இவ்வாறு பயனின்றி பலர் வாழ்வு கழிந்து விடுகிறது.

இதனால்தான் தொண்டரடிப்பொடி ஆழ்வார்,

*ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே*

என்று கேட்டார்;

*சிஷ்யர்கள்:* உன்னத பக்தர் அவர். அது கிடைக்கப் பெறுகிறார். ஆனால் நாம் கேட்டாலும் கிடைக்குமா? பெரிய கேள்விக்குறிதான். இந்த நிலையில் என்ன செய்வது?

*குரு:* சரியான கேள்விதான். மனிதன் என்பவனிடம் மூன்றுவித குறைகள் உள்ளன. அவை சுயநலம், பேராசை, சிற்றின்பப் பற்று என்பவை. இதனால் அவன் தன்னலம் மிக்கவனாக இருக்கிறான். பேரின்பத்தில் பற்றற்று, இந்திரிய சுகங்களில் நாட்டம் மிக்கவனாக இருக்கிறான். யாருக்கும் எதையும் அளிக்காமல் தன்னைப் பற்றிய சிந்தனையிலேயே காலம் கழிக்கிறான். நூறு என்ன, ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும் அவனால் இறைவனை நாட மனம் ஏற்காது. அவன் துன்பத்திற்குக் காரணமான சம்சாரத்திலேயே உழல்கிறான்.

*இதற்கு விடையை சற்று மேற்கு நோக்கி பயணித்துத் தேடுவோம். பரூச் ஸ்பினோஸா (Baruch Spinoza) நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். 17-ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தத்துவ மேலாண்மையாகத் திகழ்ந்தவர். 'பரூச்' என்றால் 'ஆசீர்வதிக்கப் பட்டவர்' என்று இலத்தீன் மொழியில் பொருள். அவர் கருத்தாழம் வியக்கத் தக்கது. அவர் யூத மதத்தைச் சேர்ந்தவர். ஆயினும் அவர் கருத்துகள் பல அந்த மதத் தலைவர்களைக் கோபமடையச் செய்கிறது. அவர் 1656-ஆம் ஆண்டு அந்த மதத்திலிருந்து நீக்கப் படுகிறார். அந்த அளவுக்கு அவரின் தாக்கம் இருந்தது.*

*இவர் சொல்கிறார்,*

*'மனிதனின் மிகப் பெரிய செயல், கற்றுணர்ந்து, அதனால் பெறும் புரிதலாகும். இந்தப் புரிதலே சுதந்திரம்.' (The highest activity a human being can attain is learning for understanding, because to understand is to be free. Baruch Spinoza)*

*இவர் கருத்தை சற்று உற்று நோக்குவோம். புரிதல் என்பது எதாவது ஒன்றைப் பற்றிய முழுமையான அறிவு. இதில் மிக முக்கியமான தெளிவு நமக்கு நம்மைப் பற்றிய அறிவு. இதைத்தான் ரமண பகவான் 'நான் யார்?' என்ற கேள்வி மூலம் எழுப்பினார்.*

*ஆனால் இது சுலபமான தேடல் இல்லை. இந்த உடலுக்கு அப்பாற்பட்ட ஒரு ஆத்மா நம்முடன் தொடர்புடையது என்னும் கருத்து வரும்போது இந்த உடல் ஒரு தடை என்று அறிகிறோம். இது ஆரம்ப நிலை. ஆனால் இந்த உடலையே ஒரு சாதனமாகக் கொண்டு அதனினும் மாறுபட்ட ஒரு பெரிய பொருளைத் தேடல் என்பதே நம்மை மேலும் உயர்த்தக் கூடிய நிலை.*

*சிஷ்யர்கள்:* புரியவில்லையே; சற்றுக் கடினமாக உணருகிறோம்.

*குரு: அப்படியா.... சரி, மறுபடியும் கிழக்கு நோக்கி வருவோம்.*

*திருமூலர் ஒரு ஆழ்ந்த அத்வைதி. அவர் சொற்கள் எளிமையாகத் தோன்றும், ஆனால் ஆழமான, பல சமயம் நம்மை சிந்திக்க வைக்கும் கருத்துகளை அவர் பாடல்களில் காணலாம். அப்படிப்பட்ட ஒரு பாடல் வருமாறு.*

***உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்***
***உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்***
***உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று***
***உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.***

*(திருமந்திரம் 725)*

*இதில் இரு நிலைகளைக் காட்டுகிறார். முதல் நிலையில் உடல் என்பது ஒரு துன்பத்திற்குக் காரணமான ஒரு தடை என உணர்தல். இதுவே ஆரம்ப நிலையில் ஒரு பெரும் விழிப்புணர்வு. இந்திரியங்கள் தங்கள் வசம் சென்றால் நாம் பெறுவது துன்பமே என உணரும் நிலை.*

*இந்த நிலையைதான் நாம் ஆரம்பத்தில் பார்த்தோம். வாழ்வு பயனற்றது என உணரும் காலகட்டம். இது தீவிரமாக உள்வாங்கப்பட்ட நிலையில் இந்திரிய சுகம் பயனற்றது என்ற விழிப்புணர்வு வரும்.*

*அடுத்தது நாம் மெதுவே இந்திரியங்கள் தன் வசப்படி போகாமல், நம் வசப்பட முயற்சிக்கிறோம். இது சற்றுக் கடினமான செயல். வயோதிகம் காரணமாக சில சுவைகள் தானாகவே விலகுகின்றன. முக்கியமாக உணவு. ஜீரண சக்தி குறைகிறது. நாக்கு விரும்பினாலும் மனம் எச்சரிக்கிறது. கொலஸ்ட்ராலும் சர்க்கரை நோயும் உடல் பருமனும் பல சிகப்பு விளக்குகளை எரிய விடுகின்றன.*

*இவ்வாறு ஒவ்வொரு அவயவமும் சக்தி இழக்கத் துவங்குகின்றன. 'சே, என்ன வாழ்வு. அழியப்போகும்*

உடலுக்கா இத்தனை அவஸ்தைப் பட்டோம்?' என எண்ணுகிறோம். இதையே

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்'

என்று மேற்கண்ட பாடலில் பார்க்கிறோம்

ஆனால் இது திருமூலர் அனுபவித்த இறுதிநிலை அல்ல.

இந்த உடலின் உள்ளே ஒரு பரம்பொருள் இருக்கிறது. அது கட்டைவிரல் பரிமாணத்தில் உறைகிறது. அதை உணர்ந்து உசுப்பேற்றினால் அது நம் உடல் முழுவதும் வியாபிக்கிறது. இந்தப் பரவுதல் அல்லது வியாபித்தல் என்பதே 'விஷ்ணு' என்னும் பதத்தின் பொருள். இதுதான் இந்தப் பாடலின் இரண்டாவது வரி.

'உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்'

இந்த நிலை வந்தவுடன் நான் என்னும் ரத்தமும் சதையும் மலமும் சேர்ந்த இந்தச் சாதாரண உடல், பிரம்ம ஸ்வரூபமாகிறது. உடல் என்னும் அமைப்பு இறைவன் உறையும் கோவிலாகிறது. அதனால் என் உடலை நானே ஒரு ஆலயமாகப் பார்க்கிறேன்.

அப்பொழுது 'நான்' என்னும் இந்த பௌதிகப் பரிமாணம் அதற்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி ஆகிறது. அதுவும் எப்பேர்ப்பட்ட சக்தி? இந்த உடல் ஒரு கோவில், அதனுள் தெய்வீக சக்தி ஒன்று வியாபித்துள்ளது என்னும் உணர்வு படைத்த சக்தி.

இந்த சக்திதான் 'அஹம்'. இந்த உணர்வுதான் 'அஹம் ப்ரஹ்மோஸ்மி'. ப்ரஹ்தாரண்யக உபநிஷதத்தின் மகாவாக்கியம். நானே கடவுள். ஆனால் இது தவத்தை மெச்சி, வரன் கொடுக்கும் தெய்வம் அல்ல. 'எதுவும் தேவையல்ல; எல்லாமே என் வசம்' — என்று பேரறிவு படைத்த ப்ரம்ஹ சக்தி.

வேறு நோக்கில் பார்த்தால், இதுவே ‘தத்வமசி’ என்னும் உபநிஷதக் கோட்பாடு. ‘நீ அதுவாக இருக்கிறாய்’ என்னும் சாந்தோக்கியம் கண்ட தத்துவம்.

இரண்டிற்கும் என்ன வேறுபாடு? இல்லை இரண்டும் ஒன்றேதானா?

‘நானே பிரம்மம்’ என்பது என் அநுபவம். நானாகத் தெரிந்து கொண்டது. நான் யார் என்னும் வினாவிற்கு ஏற்ற விடை — அஹம் ப்ரம்ஹோஸ்மி

‘நீ அதுவாக இருக்கிறாய்’ என்பது மூன்றாம் மனிதனின் நிலை. திருமூலர் கண்ட விடை. உடல் என்னும் ஆலயத்தில் உறையும் ஆண்டவனைக் கண்டவனின் நிலைப்பாடு — தத் த்வம் அசி.

அப்படியானால் அந்த மூன்றாம் மனிதன் யார்? சற்று யோசித்துப் பார்த்தால் அதுவும் ஜீவாத்மாதான். நானே பிரம்மம்’ என்பதை அநுபவத்தால் தெரிந்துகொண்ட ஒன்று.

இந்தப் பேரானந்த உணர்வில் ‘நானும்’ ‘நீயும்’ ஐக்கியப்பட்டுப் போகின்றன.

இதுதான் இரண்டு என்று இல்லாத நிலை. ஒன்றே இரண்டாக மூன்றாகப் பலவாக விரிந்து, பின்னர் ஞானத் தெளிவால் ஒன்றுபட்ட நிலை.

ஸ்பினோஸா சொன்னதை மறுபடியும் நினைவு கூர்வோம். ‘மனிதனின் மிகப் பெரிய செயல், கற்றுணர்ந்து, அதனால் பெறும் புரிதலாகும். இந்தப் புரிதலே சுதந்திரம்.’

இந்தச் சுதந்திரம்தான் விடுதலை. சம்ஸ்கிருதத்தில் மோக்ஷம்.

திருமூலர் இதற்கு அடுத்தபடியில் இருக்கிறார்

**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே**

*அவர் உடம்பை இழிந்தது என்று பழிக்கவில்லை. இந்திரியங்கள் தன் வசம் செல்ல அவர் அனுமதிக்கவில்லை. இந்த உடலை நேசித்தார். இதையே ஆலயமாக்கினார். அதனுள் சுத்த சைதன்யத்தைப் பிரதிஷ்டை செய்தார். தன் உடலுக்கு வெளியிலிருந்து தன் சரீரத்தையே தெய்வம் வசிக்கும் புனித இடமாகப் பார்த்தார்.*

*இதேபோல தன் மனதினுள்ளேயே, பார்த்துப் பார்த்து... ரசித்து ரசித்து சிவபெருமானுக்கு ஆலயம் எழுப்பிய பூசலார் நாயனார் கதை பலருக்கும் நினைவுக்கு வரும். இவர்கள் மிகச் சிறந்த பக்தர்கள். இந்த நிலை எல்லோருக்கும் சுலபமாக வராது.*

*இவர்களை வேதம் 'தீரர்கள்' என்று அழைக்கிறது. இவர்கள் ஆய்ந்து தேர்ந்து பரம்பொருளை அறிகின்றனர் என்று ருக் வேதம் சொல்கிறது (தஸ்ய தீரா: பரிஜாந்தி யோனிம். — 10.90). தீரன் என்பது ஆன்மிக உலகில், இறைவனை நோக்கி ஏகாக்ர சித்தத்துடன் செயல்படும் ஞானியைக் குறிக்கும்.*

*சரி, உடலை ஆலயமாக்கிய புனிதர்களைப் பார்த்தோம். மற்றொரு பக்கம் உடலையே இறைவனுக்கு அளித்த பல பக்தர்களையும் பார்க்கலாமா?*

*கண்ணப்பர், தன் கண்ணையே சிவனுக்கு அளித்தார். மகனைப் பிள்ளைக்கறி ஆக்கி அளித்தார் மற்றொரு நாயன்மார். தன் அழகையே அழித்து பேயுருக்கொண்டார் ஒரு அழகிய பக்தை. தன் மனைவியை சிவனடியார்க்கு அளித்ததோடு அவருக்குப் பாதுகாப்பு அளிக்கத் தன் உற்றாரையே கொல்லத் துணிந்தார் மற்றொரு நாயனார். இப்படி எத்தனை எத்தனை வரலாறுகள்!*

இவர்கள் அனைவருக்கும் இறைவன் காட்சி அளிக்கிறான்.

*சிஷ்யர்கள்:* அப்படியானால் ஞானிகள் அனைவரும் ஒரே கோட்டில் இணைவதில்லையா?

*குரு:* நல்ல கேள்வி. முதலில் நாம் பார்த்தவற்றை வரிசைப்படுத்துவோம்.

முதலில் நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் இறை சிந்தனை இல்லாமல் போன அவலத்தை 'திருமாலை' என்னும் நூலில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் அழகிய பாசுரமாக ஆக்கியதைக் கண்டோம். அதனால் மனிதப் பிறவியே வேண்டாம் என்று ஆழ்வார் பாடுகிறார்.

இதன் நீட்சியாக புரிதலே சுதந்திரம் என்ற (ஸ்பினோஸாவின்) மேலை நாட்டுக் கருத்தைக் கண்டோம்.

இதன் சிறந்த வடிவமாக இந்த வீணாகும் உடலே இறைவன் உறையும் இல்லம் என்னும் திருமூலரின் உள்ளப்பாங்காக அறிந்தோம்.

பின்னர் இந்த உடலையே இறைவனின் வேள்விக்கு ஆகுதியாகத் தந்த அடியவர்களின் மாட்சியையும் கண்டு வியந்தோம்.

இதனால் நாம் கற்பது என்ன? இந்த உடல் மற்றும் இந்திரியங்கள் நம்மை நல்ல வழிக்கு எடுத்துச் செல்லக் கூடியவை. அவையே கீழ்மையாக நம்மை ஆக்கவும் கூடும். இந்த முறையில் முதல் பாதையில் சென்றவர் நாவுக்கரசர். 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்று எக்காளமிட்டவர்.

அவர் மட்டுமல்ல. ஆதலால் பிறவி வேண்டேன் என்று சொன்ன அதே தொண்டரடிப்பொடி ஆழ்வார் அதற்கு முந்தைய பாசுரத்தில் நாவுக்கரசர் சொன்ன அதே கருத்தை ஆணித்தரமாக சொல்வார்.

*பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்*
*அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்*
*இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.*
*(திவ்யப்பிரபந்தம், 873)*

அரங்கத்தில் அமர்ந்த அந்தப் பிரானின் அழகிய தோற்றத்தைக் கண்ட அவருக்கு சுவர்க்கமும், வைகுண்டமும் பிடிக்காமல் போக, அந்த ஆலயத்தில் அமர்ந்துள்ள பெருமாளே எனக்கு எல்லாம் என்று ஆணித்தரமாக உரைக்கிறார்.

*சிஷ்யர்கள்:* பிறவி வேண்டாம் என்று சொன்ன ஆழ்வார் இச்சுவை வேண்டும் என்று கேட்பது முரணாக இருப்பது போலத் தோன்றுகிறதே?

*குரு:* நூறாண்டு வாழ்ந்தும் ப்ரம்ம நிஷ்டை வராதவர்களுக்கு பிறவி வேண்டாம் என்னும் பிரார்த்தனை. இது ஒரு நிலைப்பாடு.

இறையருள் என்னும் ரசத்தைச் சுவைத்தவர்களுக்கு இப்பிறவியே அமிர்தம்; வேறொன்றும் வேண்டேன் என்னும் பேரானந்தத் திளைப்பு. இது மாறுபட்ட மற்றொரு நிலைப்பாடு.

எவரெவர் எந்த முறையில் வழிபடுகின்றனரோ, அந்த அந்த முறையிலேயே அவர்களை ஏற்றுக் கொள்கிறேன் என்று தேர்த் தட்டில் ஒரு சாரதி சொன்னானல்லவா? அதுதான் இந்த நிலை. இதில் முரண் எங்கு வந்தது?

திருமூலர் கருத்தும் இதுவேயாகும்.

சித்தாந்த அடிப்படையில் இவர்கள் வேறு பட்டவர்கள். ஆழ்வார் கண்டது பக்திப் பரவசம். திருமூலர் திளைப்பது அத்வைத எக்காளம். ஆனால் இருவர் அநுபவமும் ஒன்றே.

அதுவே ஞானம்.

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### *16. முக்தி காண்டம்*

*குறள் 171: தன்னை அறியும் அறிவுதனைப் பெறில்*
*பின்னைப் பிறப்பில்லை வீடு*

*பொருள்: 'நான் யார்' என்று ஆராயும் விசார மார்க்கமாம் நேர்வழியை உணர்ந்தால், பிறப்பு-இறப்பு என்னும் நிலைகளைத் தாண்டி வீடுபேறு அடையலாம்.*

*விளக்கம்: ஔவைப் பிராட்டியின் இந்த நேர் வழியினை பகவானும் உணர்த்துகிறார்:*

*இன்றுஅகம் எனும்நினைவு எனில்பிற ஒன்றும்*
*இன்று; அதுவரைபிற நினைவுஎழில் ஆர்க்குஎற்கு*
*ஒன்றுஅகம் உதிதலம் எதுஎன உள்ஆழ்ந்து*
*உளத்தவிசு உறின்ஒரு குடைநிழல் கோவே*
*இன்றுஅகம் புறம்இரு வினைஇறல் சன்மம்*
*இன்புதுன்பு இருள்ஒளி எனுங்கனவு இதய*
*மன்றகம் அசலமா நடமிடும் அருண*
*மலையெனும் எலையறும் அருள்ஒளிக் கடலே.*

*(அருணாசல அஷ்டகம், 7)*

*'நான்-நான்' என்று உதிக்கும் தேகாத்மபாவம் எழவில்லை எனில், அதன் விகாசமாகிய வேறு எதுவுமே எழாது. நான் என்னும் முதல் எண்ணம் அற்றுப் போகும் வரையிலும், மற்ற எண்ணங்கள் எழும்போதெல்லாம், இந்த எண்ணம் யாருக்குத் தோன்றுகிறது என்று*

விசாரித்தால் ‘எனக்கு’ என்று விடை கிடைக்கும். இந்த ‘நான்’ என்னும் மூல எண்ணம் எங்கிருந்து உதிக்கின்றது என்று விசாரித்தால் அது இதயத்தில் ஒன்றிவிடும். இவ்வாறு விசாரணையில் மூழ்கி இதய சிம்மாசனத்தை அடையப் பெற்றால் உள், வெளி, பிறப்பு, இறப்பு, சுகம், துக்கம், இருட்டு, ஒளி ஆகிய இரட்டைகளாகத் தோன்றும். அஞ்ஞானக் கறைகள் மறைந்துவிடும் என்கிறார் பகவான்.

திருமந்திரமும் இதே கருத்தைச் செப்புகிறது.

*தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னை அறியாமல் தானும் கெடுகின்றான்*
*தன்னை அறியும் அறிவை அறிந்தபின்*
*தன்னையே அருச்சிக்கத் தான் இருந்தானே*

(திருமந்திரம், 2355)

தன்னை முழுவதுமாக உணர்ந்தவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை. தன்னை அறியாமல், தாங்களே துன்பப் படுகிறார்கள். தன்னை முழுவதும் அறியும் அறிவு இறைவனாலே வாய்க்கும் என்பதை அறிந்தபிறகு, தன்னையே பிறர் வழிபடத் தகுந்தவர்களாக இருப்பார்கள்.

இத்தகைய அத்வைதக் கருத்தினை அப்பர் சுவாமிகளும் கூறுகிறார்:

*தன்னில் தன்னை அறியும் தலைமகன்*
*தன்னில் தன்னை அறியில் தலைப்படும்*
*தன்னில் தன்னை அறிவிலன் ஆயிடில்*
*தன்னில் தன்னையும் சார்தற்கு அரியனே*

(அப்பர் தேவாரம், 5-97-29)

தன்னை உணர உள்நோக்கி விசாரித்தால் தலைமகனால் பரமாத்மாவை உணர்வோம். தன்னையும், தலைவனையும் ஒன்றாக அறிதலே ‘தலைப்படுதல்’. குருவருளால் தலைவனைச் சார்தல்

வேண்டும். அதற்குக் குருவருளை நாடாவிட்டால் இறைவனைச் சார்தல் அரிதாகும்.

குறள் 172: அறம்பாவம் ஆயும் அறிவுதனைக் கண்டால்
பிறந்துஉழல வேண்டா பெயர்ந்து.

பொருள்: பாவபுண்ணியங்கள் எங்கிருந்து உண்டாகின்றன என்று ஆராய்ந்து அறியும் விசார மார்க்கத்தை உணர்ந்தால் தொடர்ந்து வரும் பிறப்பு-இறப்பு சங்கிலி அறுபடும். மீண்டும் பிறப்பு எடுத்து உழல வேண்டாம்.

குறள் 173: சிவன்உருவம் தானாய்ச் செறிந்துஅடங்கி நிற்கில்
பவநாசம் ஆகும் பரிந்து.

பொருள்: 'அஹம் பிரம்மாஸ்மி' என்று ஞானவிசாரம் செய்து அஹங்காரம் அடங்கினால், எத்தகைய எண்ணத் தோற்றமும் இன்றி, பிறப்பு-இறப்பு அழிந்து போகும்.

குறள் 174: உறக்கம் உணர்வோடு உயிர்ப்பின்மை அற்றால்
பிறப்பின்றி வீடாம் பரம்.

பொருள்: 'அறிதுயில்' எனப்படும் ஆத்ம ப்ரஞ்ஞையோடு கூடிய உணர்வினை, பிராணனில் அசைவு இல்லாமல் கூர்ந்து நோக்கினால், ஞான எழுச்சி பெற்று, இந்த உடலே இறைவன் வாழும் இல்லமாகும் (அல்லது) அங்ஙனம் சாதனை செய்பவன் பிறப்பு-இறப்பு இவற்றைக் கடந்து முக்திநிலையை எய்துவான்.

மனமற்ற நிலையில் ஆத்மா எங்கும் விரிவடைகிறது.

குறள் 175: நினைப்பு மறப்பு நெடும்பசியும் அற்றால்
அனைத்துலகும் வீடாம் அது.

பொருள்: நான் 'உடல்-மனம்' என்ற தவறான நினைப்பும், 'நான் ப்ரம்மம்' என்ற தெய்வீக நிலையை மறக்கும் பிரமாதமும், உலக வஸ்துக்களை அனுபவிக்கத் தாவும் மனப்பசியும் ஒழிந்த சமயத்தில்

*அனைத்துப் படைப்புகளும் உன்னுள்ளேயே ஒடுங்குகின்றன.*

*விளக்கம்: மனதின்கண் உண்டாகும் நினைவும், சத்யத்தை அறிய ஒண்ணாது தடுக்கும் பொய்மனம் முடிச்சுகளும் இதுவேண்டும், அதுவேண்டும் என்று நீங்காத விஷய வஸ்துக்களின்மீது கொண்ட ஆசையாகிய பசியும் ஒழிந்த இடத்து எல்லா உலகமும் நான் வீடாய் அமைகிறது.*

*நினைப்பு - வலிமை வாய்ந்த எண்ணங்கள் ஆகாயத்தில் வெற்றி பெறத் தூண்டுகின்றன.*

*மறப்பு - மன, வாக்கு, காயங்களின் செயல்பாட்டின் போது தன் மெய்ம்மையை மறந்த*

*பசி - உலகப் பொருட்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை.*

*எண்ணங்களை அழிக்க மனம் பலப்படும். தான் உண்மையில் ஆத்மாவே என்பதை மறக்காது இருந்தால் அனைத்தையும் ஞானவிளக்கம் அறிய முடியும்.*

*இந்த ஞான வலிமை வெளியே செல்கின்ற மனத்தை உள்நோக்கிச் செலுத்தும்.*

*திருமந்திரமும் இதே கருத்தைக் கூறுகிறது:*

*பிறப்பு அறியார் பல பிச்சை செய் மாந்தர்*
*சிறப் பொடு வேண்டிய செல்வம் பெறுவர்*
*மறப்பு இலர் ஆகிய மா தவம் செய்வார்*
*பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றாரே.*

*பிச்சைசெய் மாந்தர் - பிட்சை எடுத்து உண்ணும் தவசிகள்*

*மறப்பிலர் - தாம் உண்மையில் ஆத்மா என்பதை மறக்காதவர்கள்*

*பெருந்தவம் - குரு திருவடிகளை சதா இதயத்தில் பதித்து இருத்தல்*

*குறள் 176: உடம்புஇரண்டும் கெட்டால் உறுபயன் ஒன்றுண்டு*
*திடம்படும் ஈசன் திறம்.*

*பொருள்: நான் சூட்சும உடலா, அன்றி இத்தூல உடலா என்று வேறுபடுத்தும் குழப்பம் மறைந்தால் (அதாவது தூலம், சூட்சுமம் இரண்டிலுமே பரவியிருப்பது பரம்பொருளே என்ற) ஞானம் வந்து இறைவன் அருள் உன்னை முற்றிலுமாகப் பற்றும்.*

*குறள் 177: தன்னை அறிந்து செறிந்துஅடங்கித் தான்அற்றால்*
*பின்னைப் பிறப்பில்லை வீடு.*

*பொருள்: அஹம் ப்ரஹ்மாஸ்மி - 'நான்' என்னும் ஆத்மாவே பரம்பொருள் என்று அறிந்து, அதனுடன் சேர்ந்து ஒன்றினால் பிறப்பு-இறப்பு என்ற சுழலில் இருந்து விடுபடலாம். பேரறிவில் ஒன்றியபின் ஜீவபோதம் முற்றிலும் ஒடுங்கி ஒழிகின்றது.*

*'தன்னை அறிந்திடில் பின் என்னை உளது அறிய' என்று பகவான் ஆன்ம வித்தைக் கீர்த்தனத்தில் கூறுகிறார்.*

*மேலும் சத்குருவின் அருட்சிறப்பைக் கூறுமிடத்து,*

*ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி*
*ஒருதனது அபிமுகமாக*
*ஈர்த்து அதைத்தன்போல் அசலமாச் செய்து*
*இன்னுயிர் பலிகொளும்*

*என்று தெளிவுற அருள் விளையாடலை விளக்குகிறார் பகவான்.*

*குறள் 178: மருள்அன்றி மாசுஅறுக்கின் மாதூ வெளியாய்*
*இருள்இன்றி நிற்கும் இடம்.*

*பொருள்: இங்ஙனம் விசாரப் பயிற்சியால் மனமயக்கமாக மாயையை நீக்கி மனமாசுக்கள் (ஐம்புலக் கள்வர்கள் காமம், குரோதம், மோஹம், மதம், மாத்சர்யம்) அனைத்தையும் களைந்து ஒழித்து இறைவன் அருட்பொழிவுக்கு ஆயத்தமாய் நின்றால் அஞ்ஞான இருள் நீங்கி, ஞானப்பேரொளி இதயத்தே உதிக்கும்.*

*குறள் 179: விகாரம்கெட மாற்றி மெய்யுணர்வு கண்டால்*
*அகாரமாம் கண்டீர் அறிவு.*

பொருள்: மனத்தில் குடிகொண்டுள்ள மனவிகாரங்கள் அனைத்தையும் அழித்து, நெஞ்சத்தைத் தூய்மையாக மாற்றி, மெய்யுணர்வு எனப்படும் ஆத்ம சாட்சாத்காரம் பெற்றால், ப்ரணவத்தில் பேரொளியாய் ஆத்மஞானம் ப்ரகாசிக்கும்.

*குறள் 180: சிந்தை ஆங்காரம் செறிபுலன் அற்றக்கால்*
*முந்தியே ஆகுமாம் வீடு.*

பொருள்: மனதின் ஓட்டங்கள், தன்முனைப்பு ஆகிய அஹங்காம், வெளிவிஷயங்களை நோக்கி ஓடும் ஐம்புலன்களின் கவர்ச்சி இவற்றை நீக்கி எப்போதும் வெளியே செல்லாமல் மனத்தைத் தடுத்து நிறுத்தி, உள்நோக்கி இதயத்தில் படியவைத்தால் ஆத்மஞானம் பெற்று 'நான் யார்' என்பதை அறியலாம்.

*திரும்பி அகந்தனை தினமகக் கண்காண்*
*தெரியும் என்றனைஎன் அருணாசலா*

*(அக்ஷரமணமாலை, 44)*

---

## ரமணோதயம்
## Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770
ராஜேஷ் M.S. 9840075778

## பௌர்ணமி நாட்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நவம்பர் | 07 | திங்கள் | மாலை 4.15 | 08 | செவ்வாய் | மாலை 4.31 |
| டிசம்பர் | 07 | புதன் | காலை 8.01 | 08 | வியாழன் | காலை 9.37 |

# ஒரு முதலமைச்சரின் பக்தி – ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்

**ரவீந்திர நாராயணன்**

*இப்படி ஒரு அரசியல்வாதி, ஒரு முதலமைச்சர் இருந்தார் என்பதை இன்று எத்தனை பேர் நம்புவார்கள்? பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அத்தியந்த பக்தராகவும் விளங்கிய இந்த வித்தியாசமான மாமனிதரைப் பற்றி தெரிந்து கொள்வோமா?*

அது 1947, மார்ச் மாதம். பிரிட்டிஷார் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பது என்று முடிவு செய்து விட்டார்கள். தில்லியில் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் தற்காலிக அரசு பதவியேற்றிருந்தது. ராஜதானிகளிலும் தற்காலிக அரசுகள் அமைக்க வேண்டி இருந்தது.

சென்னை ராஜதானியின் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களான ராஜாஜியும் காமராஜரும் ஒரு மூத்த காங்கிரஸ் தலைவரிடம் வேண்டுகோள் விடுக்கும் காட்சி. அந்த இரண்டு தலைவர்களும் அந்த மனிதரிடம் மன்றாடிக் கொண்டிருந்தார்கள். “நீங்கள் முதல்வர் ஆனால் தான் எல்லா உறுப்பினர்களையும் சமாளிக்க முடியும். இல்லாவிட்டால் ஆந்திரர்கள் கை இங்கே ஓங்கி விடும். அதனால் தயவுசெய்து முதல்வர் ஆவதற்குச் சம்மதியுங்கள்” என்றனர்.

அந்த இருவரின் வேண்டுகோளுக்கும் வற்புறுத் தலுக்கும் இந்த மனிதர் மறுதலித்துக் கொண்டே இருந்தார். “இந்த இக்கட்டான சூழ்நிலையில் நீங்கள் முதலமைச்சர் ஆவதுதான் இந்த நாட்டிற்கு நல்லது. வேறு யாரும் இப்போது இருக்கும் நிலைமையைச் சமாளிக்க முடியாது, என்றனர் அவ்விருவரும் ஒருமித்த குரலில்.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சில நிபந்தனைகளை விதித்தார். கட்சிக்காரர்கள் தன்னை எந்த ஒரு சலுகைக்காகவும் அணுகக் கூடாது என்பது போன்ற நிபந்தனைகளை விதித்தார். நிபந்தனைகளுக்கு ராஜாஜியும் காமராஜரும் ஒப்புக் கொண்டார்கள்.

ராமசாமி ரெட்டியார் தெலுங்கு பேசுபவரானாலும் தமிழ்நாட்டில் திண்டிவனத்திற்கு அருகில் இருக்கும் ஓமந்தூரைச் சேர்ந்தவர். இதனால் ஆந்திரர்கள், தமிழர்கள் இரு சாராரையும் அவரால் சமாளிக்க முடியும் என்றுதான் ராஜாஜியும் காமராஜரும் அவரை வற்புறுத்தினார்கள். அன்றைய சென்னை ராஜதானி என்பது, தமிழ்நாடு, ஆந்திரா, கேரளத்தின் பலப் பகுதிகள், கர்நாடகத்தின் ஒரு சில பகுதிகள் மற்றும் ஒடிஸாவின் ஒரு பகுதியும் அடங்கியதாக இருந்தது. ரெட்டியார் தன் முழு சம்மதத்தையும் கொடுக்கவில்லை. “என் நிபந்தனைகளுக்கு நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள். ஆனால் நான் முதல்வர் ஆவது என் கையில் இல்லை. என் குருவிடம் நான் அனுமதி பெற வேண்டும். அவர் அனுமதி அளித்தால் மட்டுமே நான் முதல்வர் ஆக ஒப்புக் கொள்ள முடியும்” என்றார். ராஜாஜிக்கும் காமராஜலுக்கும் வேறு வழி இருக்கவில்லை. “சரி, நீங்கள் உங்கள் குருவிடம் கேட்டுவிட்டு வாருங்கள்” என்றனர்.

ரெட்டியார் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே ஏதாவது போராட்டத்திற்குச் செல்ல வேண்டுமானால் அதற்கு முன் தனது குருவிடம் சென்று அனுமதி கேட்பார். குரு அனுமதியளித்த பின்புதான் ரெட்டியார் போராட்டத்தில் கலந்துகொள்ளப் புறப்படுவார். இதோ, இப்போது அவர் வந்திருப்பதும் தன் குரு இருக்கும் திருவண்ணாமலைக்குத் தான். ரெட்டியார் நமஸ்கரித்து எழுந்தபின், பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி ஓமந்தூராரை தன் வசீகர சிரிப்போடு, மிக்க காருண்யத்துடன்

நோக்கினார். ரெட்டியார் கூறலானார், “பகவான், ராஜாஜியும் காமராஜரும் என்னை முதல்வர் ஆக வேண்டும் என்று மிகவும் வற்புறுத்துகிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?” அதே வசீகரப் புன்னகையுடன் பகவான், “சரி” என்று ஒரு வார்த்தையில் சம்மதத்தைத் தெரிவித்தார். சென்னை திரும்பிய ராமசாமி ரெட்டியார் 1947-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் தேதி சென்னை ராஜதானியின் முதலமைச்சர் ஆனார்.

1947, ஆகஸ்டு 15-ஆம் நாள் விடிந்தது. இந்தியா விடுதலை அடைந்தது. புனித ஜார்ஜ் கோட்டையில் பிரிட்டிஷ் கொடியை இறக்கி முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார். அதிகாலையிலேயே அந்த வைபவத்தை முடித்துக்கொண்டு, திருவண்ணாமலை விரைந்தார். முதல்வரின் காரில் பயணிக்காமல் தன்னுடைய சொந்த வாக்ஸ்ஹால் காரில் திருவண்ணாமலை சென்றார் ஓமந்தூரரார். ரமணாஸ்ரமத்தில் சுதந்திர இந்தியா



*1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி பாரதம் சுதந்திரம் அடைந்த அன்று ரமணாஸ்ரமத்தில் தேசியக் கொடியை ஏற்றியபின் பகவான், முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், கிட்டு மாமா, T.N. வேங்கடராமன், V. சுந்தர ரமணன், V. சுப்ரமணியன் ஆகியோர்*



*ஆகஸ்டு 15 அன்று ஓமந்தூராரின் வாக்ஸ்ஹால் காரின் மேல் நடனமாடும் வெள்ளை மயில் மாதவன். அதைக் கண்டு ரசிக்கும் மாதவனின் குரு பகவான் ரமண மஹரிஷி.*

*பிறந்ததை முன்னிட்டு தேசியக் கொடியை ஏற்றுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. பகவானும் இந்த வைபவத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். பகவான் வந்ததும் தேசியக் கொடியை ஏற்றினார் ராமசாமி ரெட்டி. அப்போது, பரோடா மஹாராணி ஆஸ்ரமத்திற்கு பரிசளித்திருந்த வெள்ளை மயில் மாதவனும் அனைவரும் கொண்டாடும்போது நாமும் ஏன் கொண்டாடக் கூடாது என்று நினைத்தான் போலும். அவனும் பாரத சுதந்திரத்தைக் கொண்டாடினான். எப்படி? ஓமந்தூராரின் வாக்ஸ்ஹால் காரின்மேல் உட்கார்ந்து கொண்டு நடனம் ஆடினான். பகவானும் அதைப் பார்த்து மிக ரசித்துக் கொண்டிருந்தார்.*

*1949-ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரமணாஸ்ரமத்தில் நடைபெற்ற தாயார் கோயில் கும்பாபிஷேக*

*ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு, எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக்கொண்டு வைபவத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மிகவும் உதவிகரமாக இருந்தார் ஓமந்தூரார்.*

*கட்சிக்காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் ஆண்டது போதுமென்று ஓமந்தூரார் 1949 ஏப்ரல் மாதம் தன் முதல்வர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வடலூரிலுள்ள ராமலிங்க ஸ்வாமிகளின் மடத்திற்குப் பக்கத்தில் குடியேறினார். அடுத்து வந்த முதல்வர் ராஜபாளையம் குமாரசாமி ராஜாவும் பகவானின் பக்தர் தான்.*

*1950 ஏப்ரல் 14-ஆம் தேதி. அன்றுதான் நாம் பகவானைக் கடைசியாகப் பார்க்கப் போகிறோம் என்பதை பக்தர்கள் உணர்ந்தார்கள். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அன்று காலையில் இருந்தே ரமணாஸ்ரமத்தில் இருந்தார். எந்த அசம்பாவிதமும் நடந்து விடக் கூடாது என்பதற்காக ரமணாஸ்ரமத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தார். திருவண்ணாமலையிலும், அண்ணாமலையார் கோயிலிலிருந்து அக்னித் தீர்த்தம் வரையில் 3 போலீஸ் லாரிகளை நிறுத்த ஏற்பாடு செய்தார். வரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்கைப் பராமரித்தார். இரவு 8.40. எதிரே அம்மா கோவிலின் படிகளில் அமர்ந்திருந்த பக்தர்களை ஓமந்தூரார் அக்ஷரமணமாலை பாராயணம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். 'அருணாசல சிவ அருணாசல சிவ' என்ற தன் உன்னதப் படைப்பான அக்ஷரமணமாலையைச் செவிமடுத்த பகவானின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. 8-47-க்கு மூச்சு அடங்கியது. அவ்வமயம் ஒரு பேரொளி புறப்பட்டு வடக்கு நோக்கி நகர்ந்து அண்ணாமலையின் சிகரத்தின் பின்னால் மறைந்தது. இந்தப் பூமியின் சரித்திரத்தில் நிகரில்லாத ஒரு மாபெரும் அத்தியாயம்*

தன் உலகப் பயணத்தை முடித்துக்கொண்டு பக்தர்களின் இதயத்தில் நிரந்தரமாகக் குடி கொண்டுவிட்டது.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மஹா நிர்வாணத்திற்குப் பிறகும் அடிக்கடி ரமணாஸ்ரமத்திற்கு விஜயம் செய்து கடினமான அந்த முதல் இருபது வருடங்களில் ஆஸ்ரம நிர்வாகத்திற்கு உறுதுணையாக இருந்தார்.

நோய்வாய்ப்பட்ட போதும் ஓமந்தூரார் அரசாங்க செலவில் சிகிச்சை ஏற்க மறுத்து விட்டார். வடலூரில் 1970-ஆம் வருடம் ஆகஸ்டு திங்கள் 23-ஆம் நாள் எளிமையின் அடையாளமான ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பகவான் காலடி சேர்ந்தார்.

ஓமந்தூரார் வாழ்ந்தது சுதந்திர போராட்ட வீரராகவோ, முதலமைச்சராகவோ அல்ல. தனது அந்திம காலம் வரையில் பகவானின் பக்தராகவே வாழ்ந்து அண்ணாமலை ரமணனில் கலந்தார்.

# இனிவரும் திருநாட்கள்

## 2022

| | | | |
|---|---|---|---|
| அக்டோபர் | 24 | திங்கள் | தீபாவளிப் பண்டிகை |
| நவம்பர் | 27 | ஞாயிறு | கார்த்திகை தீப விழா தொடக்கம் |
| டிசம்பர் | 6 | செவ்வாய் | கார்த்திகை தீபம் |

## 2023

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 7 | சனி | பகவானது 143-ஆவது ஜயந்தி |
| | 15 | ஞாயிறு | பொங்கல் பண்டிகை |

# சரணாகதி

**தீபா மகேஷ்**

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் உபதேசங்களின் சாராம்சம் என்னவென்று யாரேனும் கேட்டால், ‘நான் யார்’ விசாரம் அல்லது ‘சரணாகதி’ என்று கூறலாம். அவை நாணயத்தின் இரு பக்கங்கள்போல என்று பகவான் கூறுவார்.

‘நான் யார்’ என்று விசாரம் செய்பவர்களே சரணாகதி செய்ய முடியும். சரணாகதி செய்யத் தெரிந்தவர்களுக்கே ‘நான் யார்’ விசாரம் பிடிபடும். இந்த இரண்டு வழிகளிலுமே ‘நான், எனது’ என்ற அகந்தைக்கு இடமில்லை.

இந்த நான், எனது பற்றி ஒரு சுவையான கதை பாகவதத்தில் உண்டு. விஷமம் செய்த கண்ணனை, யசோதை உரலில் கட்ட முற்படுகிறாள். எத்தனை முறை கட்ட முயன்றாலும், எத்தனை நீளமான கயிறாக இருந்தாலும், இரண்டு அங்குலம் குறைகிறது. எவ்வளவு முயன்றும் முடியாமல், கடைசியில் யசோதை சோர்வடைந்து, தளர்ந்து போகும்போது, பகவான் கண்ணன் அவள்மேல் கருணைகொண்டு, தான் கட்டுப்பட இசைந்து கொடுக்கிறான்.

நான், எனது என்பதுதான் அந்த இரண்டு அங்குலம். நான், எனது என்று எதையெல்லாம் நினைக்கிறோமோ அதையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுவதே சரணாகதி.

இந்த இரண்டையும் கடந்து செல்லும்போது தான் உள்ளிருக்கும் இறைவனை நம்மால் உணர முடியும்.

இந்த நான் என்பது என்ன? உடலா? மனமா? புத்தியா?

இந்த உடல்தான் நாம் என்று நினைத்து அதைப் போற்றிப் பேணுகிறோம். ஆனால், ஜடமான உடல் நாம் அல்ல. இந்த உடல் நாம் அணியும் ஆடை போன்றது. ஆடை நம்முடையதுதான் என்றாலும், ஆடை நாம் அல்ல. அது போல இந்த உடல் நம்முடையது என்றாலும், இந்த உடல் நாம் அல்ல.

எனவே, இந்த நான் என்பது உடலைத் தாண்டியது. பின், நான் என்பது மனமா? உடலாவது ஸ்தூலமாக கண்ணால் பார்க்க முடிகிறது. ஆனால் மனத்தைக் கண்டவர் யார்? அது எப்படி இருக்கும்?

இதற்கான பதிலை பகவான் தனது உபதேச உந்தியார் பாடலில் கொடுக்கிறார்.

**எண்ணங்களே மனம் யாவிலும் நான் எனும்**
**எண்ணமே மூலமாம் உந்தீபற**
**யானாம் மனம் எனல் உந்தீபற.**

எண்ணங்களின் குவியலான மனதை நாம் என்று நினைக்கிறோம். அந்த எண்ணங்களோ நொடிக்கொரு தரம் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாறிக் கொண்டே இருக்கும் இந்த எண்ணங்கள்தாம் இன்பம், துன்பம், கோபம், வெறுப்பு, பொறாமை, சோகம் என்று பல்வேறு உணர்ச்சிகளை நமக்குள்ளே தோற்றுவிக்கின்றன.

எண்ணங்களை விட்டு மனத்தைப் பிரித்துப் பார்க்க முடியாது. ஆழ்ந்து கவனித்தால், நான் என்ற எண்ணம் தோன்றிய பின்னரே, மற்ற எண்ணங்கள் தோன்றுகின்றன. எனவே, இந்த உடலை நான் என்று அபிமானிக்கும் எண்ணமே, மனம் என்று சொல்லப்படுகிறது.

*மனத்தின் உருவை மறவாது உசாவ*
*மனம் என ஒன்றில்லை உந்தீபற*
*மார்க்கம் நேர் ஆர்க்கும் இது உந்தீபற*

எப்போதும் எண்ணங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் இந்த மனதின் உருவம் என்ன என்று இடைவிடாமல் விசாரம் செய்தால், மனம் என ஒன்று இல்லை என்று விளங்கும். இதுவே முக்திக்கு நேரான, எளிமையான மார்க்கம் என்கிறார் பகவான்.

இந்த தத்துவார்த்த அறிவெல்லாம் சரி, இதை எப்படி தினசரி வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவது?, என்று சிலர் கேட்கலாம். *(How to put this theoretical knowledge into practice in day-to-day life?)*

அதற்கான வழியையும் பகவானே நமக்குக் காட்டுகிறார்.

தனது பதினாறாவது வயதில் "அப்பாவின் ஆணைப்படி எல்லாவற்றையும் துறந்து மதுரையில் இருந்து அருணாசலம் வந்த பகவான், தனது அருணாசல பதிகத்தில்,

*"அன்பினில் விளையும் இன்பமே,*
*அன்பர் அகத்தினில் ஊறும் ஆரமுதே,*
*என் புகலிடம், நின் இஷ்டம், என் இஷ்டம்"*

என்கிறார்.

எனது என்று எதுவும் இல்லை, நான் என்பதே இல்லை, நீயே என் புகலிடம். உன்னுடைய இஷ்டம், என்னுடைய இஷ்டம் என்று இருப்பதே உண்மையான பக்தி. அதுவே சரணாகதி.

பகவானைப் போல பூரண சரணாகதி பண்ண நம்மால் முடியுமா என்றால், அவர் அருள் இருந்தால் முடியும்.

'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்று இதைத்தான் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் சொல்லுகிறார்.

ஆம், நாம் சரணாகதி செய்யவும் அவன் அருள் வேண்டும். ஆனால், அந்த அருளைப் பெற நாமும் நம்மாலான முயற்சியைச் செய்ய வேண்டும்.

பணிவும், தன்னலமற்ற பக்தியுமே அவனை அடையும் வழி.

தினமும் காலையில் எழுந்ததிலிருந்து இரவு படுக்கப் போகும்வரை, நமக்கு விதிக்கப்பட்ட கடமையை, அது படிப்போ, அலுவலக வேலையோ, சமையலோ, வீட்டு வேலையோ எதுவாக இருந்தாலும், பகவானே, இதை நான் செய்யவில்லை, என் மூலமாக நீயே செய்கிறாய், என்று நிஜமான பணிவோடு, பகவத் அர்ப்பணமாக செய்வதே சரணாகதி.

இப்படிச் செய்யும் எந்தச் செயலும், நம்மைக் கர்ம பந்தத்தில் சிக்க வைக்காது. நான்தான் இந்த சாதனையைச் செய்தேன், என்னால்தான் இந்த வேலை சிறப்பாக நடந்தது என்ற ஆணவமோ, அல்லது, என்னால்தான் இந்தத் தீங்கு நேர்ந்தது என்ற வேதனையோ ஏற்படாது.

இதைப் பழகப்பழக, மனம் சமநிலைப்பட்டு, சாந்தமாகும். சாந்தமான மனதில் பக்தி தழைக்கும்.

**அன்னிய சிந்தனை அணுவும் இல்லாது என்னையே**
**உன்னி எவர் என்றும் உபாசிப்பார் — என்னிலே**
**என்றும் ஒன்றும் அன்னவர் தம் யோகக்ஷேமங்களை**
**என்றும் தரித்திடுவன் யான்**

இவ்வாறு நிஜமான பக்தியோடு என்னைச் சரணடைந்தவர்களை, நான் என்றும் காத்து ரக்ஷிப்பேன் என்பது பகவான் வாக்கு.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 24. மனதையும் தாண்டி....

நாம் சிக்கிக் கொண்டுள்ள இந்த பந்தப் பிணைப்புகட்கும் அதேசமயம் இவற்றினின்று விடுபட்டு நீங்குதற்கும் மனமே முதற் காரணம். ஆசை மற்றும் உணர்ச்சிகளால் மனம் மாசடையும்போது அது பந்தத்திற்குக் காரணம் ஆகிறது. அதுவே மாசுகள் நீங்கப் பெற்று தூயதாகி உணர்ச்சிகளும் அஞ்ஞானமும் நீங்கிய நிலையில் வீடு பேற்றிக்குக் காரணமாய் அமைகிறது. என விவேகசூடாமணி (5-176) சுலோகத்தில் சங்கர பகவத் பாதர் கூறுகிறார்.

ஆச்ரம ஆலயத்தினைச் சுற்றிலும் அகன்ற கற்களாலும், கான்கிரீட்டாலும் ஆன ஓர் மேல்தளம் உள்ளது. இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் ஆச்ரம வளாகத்தில் உயிர்ச் சலனம் பெரும்பாலும் அடங்கும்போது ஆலயமும் இருளில் மூழ்கிவிடுகிறது. ஆலயத்தினின்று இந்திய ஆகமக் கோயில் முறைப்படி அமைக்கப்பட்ட ஒரு பெரிய இரும்புக் கதவால் பிரிக்கப்பட்ட வெளிக் கூடத்தில் பகவான் உறங்குகிறார். அந்தக் கூடத்தில் பகவான் மட்டுமன்றி அவருக்குத் தேவைப்படும் எந்தச் சேவைகளையும் செய்ய ஆயத்தமாய் ஒன்றிரண்டு அணுக்கத் தொண்டர்களும் அமர்ந்துள்ளனர். பகவானது உடல்நிலை இப்போது மிகவும் நலிவடைந்துள்ள படியால் இத்தகு சேவைக்குத் தேவை ஏற்பட்டுள்ளது.

*சில இரவுகளில் நிலா தனது வெள்ளொளியை இந்த அமைதி நிறைந்த பாதைகளில் பொழியும்போது நானும் எனது அறையை விட்டு நீங்கி, இந்தத் தூய்மை நிரம்பிய மேல்தளத்தில் வந்து அமர்ந்து விடுகிறேன்.*

*உணவுக் கூடத்தின் முன் உள்ள மணல் பூமியில் உள்ளூரைச் சேர்ந்த பயணிகள் வந்து அசைவின்றி உறங்கிக் கொண்டு உள்ளனர். ஆச்ரமத்தின் தண்ணீர்த் தொட்டி என் முன்னர் அமைதியாகத் தோற்றம் கொடுக்கிறது.*

*இந்த இடம் தியானத்தில் ஆழ மிகப் பொருத்தமான ஒன்று என நான் கண்டு கொண்டேன். பகவானது இருப்பு என்னிடமிருந்து மிகச் சில கஜங்கள் தொலைவிலேயே உள்ளது என்ற உணர்வு, என் மனதிற்கு ஒரு சாந்தித்யம் அளிக்கிறது. நான் பகவானிடம் இருந்து பல விஷயங்களைக் கற்றுள்ளேன். அதில் முக்கியமான ஒன்றை இங்கே நான் விளக்குகிறேன்.*

*நான்கு ஆண்டுகட்கு முன்னர் நான் பால்பிரண்டன் நூலில் எங்ஙனம் அவர் தனது முதல் சந்திப்பிலேயே ப்ரக்ஞை உணர்வின் கொடுமுடியான பேரானந்தத்தை அனுபவித்தார். அவ்வுணர்வு எண்ணங்களின் கொள்கலனாய் அமைந்த மனத்திலிருந்து முற்றிலும் வேறானது என்பதைப் படித்து அறிந்தேன். எங்ஙனம் ஒருவர் தனது இயல்பான தன்முனைப்பில் இருந்து வேறுபட்டவராய் இருக்க முடியும் என்பது என்னால் அறிய ஒண்ணாப் புதிராய் இருந்தது.*

*இப்போதோ அதுவே எனக்கு சுய அனுபவமாய் தானே வந்து துலங்கியது.*

*ஆச்ரமத்திற்கு வந்து அடைந்தபின், எங்ஙனம் நான் எனது சொந்தப் பயிற்சிகளையும் முயற்சிகளையும் நிறுத்தி விட்டேன் என்பதைக் கூறி உள்ளேன்.*

ஏனெனில், வேறு எந்த முயற்சிகளிலும் எனது சக்தியை விரயமாக்காமல் நான் இங்கு இருக்கும் ஒவ்வொரு பொன்போன்ற விநாடிகளே அறிவார்ந்த ஆற்றலுடன் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற என் உள்ளத்தில் ஆழப் பற்றிக் கொண்டது. தேவைக்கிணங்க மற்ற பயிற்சிகளைப் பின்னால் தொடரலாம்.

ஆனால், இப்போதோ ஒவ்வொரு விநாடியும் பகவானின் சந்நிதியில் ஆன்மிகத்தை முற்றிலும் பயில வேண்டும் என்பதே முதல் தேவை. இல்லையெனில் இந்த அற்புதமான தருணங்கள் வீணடிக்கப்படும்.

நாம் முன்பு 23-ஆவது பகுதியில் கண்டபடி, பகவத் தர்ஸன நிகழ்வின்போது, என்னால் எண்ணுகின்ற எனது மனது என்னும் இருப்பிலிருந்து விலகி நிற்க முடிகிறது. எனது ப்ரக்ஞை உணர்வு முழுவதுமாய் இறையுணர்வினால் மட்டுமே நிரம்பி உள்ளது என்பதை உணர முடிகிறது. மனதில் எண்ணம் முயற்சி எதுவுமே இல்லாதபோதும் எத்தகைய தடையுமின்றி வாழ்க்கை சென்றுகொண்டே உள்ளது. அப்போது நான், நான் என்னும் இந்த ப்ரக்ஞை உணர்வு எண்ணங்களைச் சார்ந்தது அல்ல என்னும் அதேசமயம் ஒவ்வொரு எண்ண ஓட்டமும் அந்த நான் உணர்வில் இருந்தே முகிழ்க்கிறது என்பதையும் அறிந்தேன். பகவானின் சந்நிதியில் நான் பெற்ற மிக உயரிய தீக்ஷை இது.

பல்லாண்டுகட்கு முன், நான் ஒரு நீண்ட சலிப்பைத் தரும் உபதேசத்தை ஓர் ஆசானிடம் பெற்று, எந்த ஒரு ஞானம் பெறுவதற்கு முன் மனதைப் பூரணமாக அழிக்க வேண்டும் என்று எண்ணி, அதே திசையில் இடையறாது முயன்று கொண்டு இருந்தேன். நான் இந்த முயற்சிகளில் சம்பாதித்தது எல்லாம் மனத் தொல்லையையும், நிலையற்ற உணர்வுகளையும் மட்டுமே. இப்போது பகவான் சந்நிதியில் எனக்கு உண்மை அறிவு எழுந்தது.

*எண்ணங்களைக் கடந்து செல்லும்போது, நாம் காண்பதெல்லம் வெறும் பொட்டல் காடுகளும், சூன்யமுமே ஆகும். எனக்கு உண்மையான நான் யார் என்னும் ப்ரக்ஞை உணர்வே அப்போது எழுந்ததில்லை. இப்போது பகவான் எடுத்துரைக்க ஒண்ணாத ஆன்மிக சக்தியால், எனக்குள்ளே ப்ரக்ஞை உணர்வு தானாகவே முகிழ்த்தது. நான் முன்பு செய்து வந்த முயற்சிகள் எல்லாம் ஒரு மின்சார மோட்டார் ஒன்றை கைக்கொண்ட ஒரு மனிதன் அதை எப்படி நிறுத்துவது என்று அறியாமல் தடுமாறும் ஓர் ஆபத்தான சூழ்நிலை போன்றது. அதனுடைய ஸ்விட்ச் (பொத்தான்) எங்கே உள்ளது என்பதை அவன் அறியவில்லை. அதேபோன்று, ஒரு சாமான்ய மனிதன் தான் நினைக்கும் போதெல்லாம் எண்ண ஓட்டத்தை நிறுத்திடல் இயலுமா? தன்னால் கட்டுப்படுத்த இயலாத ஓர் இயந்திரத்தை ஒரு மனிதன் பயன்படுத்த இயலுமா? இந்தச் சமுதாயமும் என்னதான் செய்து கொண்டு இருக்கிறது.*

*நம்மை நாமே நான் யார் என்று உணர்வதற்கு முன் நாம் கைக்கொண்ட மிக நுண்மையான அவசியமான மனம் என்னும் சக்தியினை எங்ஙனம் கட்டுப்படுத்துவது, அதன் ஸ்விட்ச் எங்கே உள்ளது என்பதை நாம் அறிய மாட்டோம். மனம் தான்போன போக்கெல்லாம் நம்மையும் அலைத்துக்கொண்டு உள்ளது. பல தருணங்களில் அது நம்மை வெளியே, வழி இல்லாத குறுக்குச் சந்துகளில் இழுத்துச் செல்கிறது. இதுவே மனத்தின் செயல்பாடு. ஆனால் நமது ஆன்மாவோ அனைத்தும் அறிந்து பகவானிடமிருந்து வெளிப்பட்ட முதல் ஞானக் கரணமே என்மேல் பட்ட நொடியில் அந்தக் கண்டுபிடிக்க இயலாத ஸ்விட்சைக் கண்டுபிடிக்க வைத்து என்னை ஸர்வ சுதந்திரன் ஆக்கியது. ஐயங்களும், நிலையற்ற தன்மைகளும் உடனே மறைந்தன.*

*இப்போது என் கண்கள் திறந்து விட்டன. வெள்ளி போன்று பளபளக்கும் ஆச்ரமத் தடாகத்தில் நீரினைக் காண்கிறேன். வெள்ளை மேகங்கள் வானில் பயணிப்பதையும் அவற்றில் இடையே ஒளியுடன் நிலா எழுவதையும் காண்கிறேன். என் வெளிச் செவிகள் அடங்கிய குரலில் தொலைவில் ஆந்தைகள் அலறுவதைக் கேட்கின்றன. ஆயினும் இவை அனைத்தும் என் ப்ரக்ஞை உணர்விற்கு அப்பாற்பட்டு அமைகின்றன. என்னுடைய பௌதிக ஜீவன் வெளி உலகுடன் தொடர்பில் உள்ளது என்பதை நான் அறிகிறேன். அதேசமயம் என்னுள்ளே உள்ள 'நான்' என்னும் மெய்யுணர்வு பூரண அமைதியில் அரசாட்சி செய்கிறது. எனக்கு உலகத்து செல்வங்கள் அனைத்தையும் பரிசாக அளித்தாலும் இந்தப் பேரமைதிக்கு மாற்றாக அதை ஏற்க மாட்டேன். இந்திரியங்களால் எழுப்பபப்பட்ட உலகாயத் மாயைகள் தகர்ந்து பொடிப்பொடி ஆகும்போது இந்த ஆன்மிக அடித்தளமாகிய பேரமைதி நிரந்தரமாக இருக்கும் என்பதை நான் அறிவேன். இந்தப் பேரமைதிக்கு வேறு ஒரு தேவை என்பதே கிடையாது. அது அனைத்திலிருந்தும் சுதந்திரமானது.*

*அது எனது ப்ரக்ஞை உணர்வினை முழுமையாக ஆளும்போது, நான் இதுவரை எது 'நான்' என்று எண்ணிக் கொண்டிருந்தேனோ, அது அழிந்து மறைகிறது. அதைக் காண இயலுமா? இயலாது. 'அது' என்னும் அந்த ஆத்மாவை நாம் தனித்துக் காண முடியாது. ஏனெனில் ப்ரபஞ்சத்தில் அதனைத் தவிர வேறு எதுவுமே இல்லை.*

*இந்த மெய்யுணர்வின் நிலையைக் குறிப்பிடும்போது அதில் 'மூழ்குதல்' அல்லது 'கரைதல்' என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறோம். இது எதுவுமே சரியானதல்ல. ஏனெனில் 'மூழ்குதல்', 'கரைதல்'*

என்ற சொற்களைப் பயன்படுத்தும்போது அதைத் தவிர வேறு ஒன்று தனித்து உள்ளது என்றும் அதில் நாம் மூழ்குகிறோம் அல்லது கரைகிறோம் என்று சுட்டுகிறோம். அது உண்மையல்ல. ஏனெனில், அதைத் தவிர வேறு ஒன்றுமே இல்லையே! இது ஒரு தனித்த அனுபவம். இது ஒரு அசைவற்ற பேரமைதி நிலை. ஒன்றுமற்ற நிலை. நம்மை மூடியுள்ள சீலைகள் அனைத்தையுமே நீக்கி நமது அதிஷ்டானமாகிய அடிப்படைப் பேருண்மையாகக் காண்பதே இந்த நிலை.

★ ★ ★

எனக்குள்ளே ஒரு விநோதமான புத்துணர்வு முகிழ்கிறது. மௌனி சாது (என்னை) நான் ஒரு காணும் பொருளாகப் பார்க்கிறேன். இந்த மௌனிசாது என்னும் பொருள் வரையறைக்கு உட்பட்டது. அது ஒரு முக்கியமான ஒன்று அல்ல. அனைவரையும் போலவே இந்த மௌனிசாதுவும் அமர்கிறார். சுவாசிக்கிறார் அல்லது ரத்த நாளங்களிலும் குருதிதான் ஓடுகிறது. ஒரு தேனடையைச் சுற்றித் தேனீக்கள் சுற்றி உள்ளே நுழைய முற்படுவதுபோல் பல்வேறு எண்ணங்கள் மனதைச் சுற்றிச் சுழன்று வந்து உள்ளே இடம் பிடிக்கப் பார்க்கின்றன. ஆயினும் இந்தப் பேரமைதி உணர்வை இந்தப் படை எடுக்கும் எண்ணங்களை உள்ளே நுழைய விடுவதில்லை.

ப்ரக்ஞை எழுச்சியின் அடுத்த உயர்நிலை நான் கண்முன்னே காணும் இந்தப் பௌதிக உலகினை மறையச் செய்யும் நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதை நான் அறிவேன். சில மாதங்கட்கு முன் என்னைச் சுற்றி எள்ள இந்த உலகம் மறையும் நிலை எய்தியபோது, என்னுள்ளே பாய்கின்ற உயிரோட்டம் தடைப்படும் நிலையை நான் எய்தினேன். ஆனால் இப்போது என் நிலை வேறுபட்டது. 'நான்'

இருக்கிறேன் என்ற ப்ரக்ஞை உணர்வு இனிமேல் என்னை விட்டு என்றும் அகலாது என்பதை நான் இப்போது அறிந்துள்ளேன்.

எதுவுமே வந்து மறையும் இப்பிரபஞ்சத்தில், 'நான் இருக்கிறேன்' என்ற இருப்புணர்வு மட்டும் மறையாமல் இருக்கும்.

இந்த ஆன்மிக நிலையில் நீடித்திருப்பதற்கு முயற்சி எதுவுமே தேவையில்லை. அதேசமயம் ஒரு விநோதத்தை நான் உணர்கிறேன். எனது மனது மட்டும் மூளைத் தொகுதியில் இந் நிலையில் நீடிக்க ஒரு பெரிய முயற்சி தேவைப்படுகின்றது என்பதை நான் அறிவேன். இதுவரை நான் அறிந்திராத புதிய ப்ரக்ஞை உணர்வின் பெரும் சக்தி வாய்ந்த அதிர்வுகளினால் இந்த மூளை — மனக் கூட்டினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்பதை நான் உணர்கிறேன். இந்தப் பேரதிர்வை அநுபவித்தபின்தான் நான் ஏன் எப்பொழுதும் அந்நிலையிலேயே நீடித்து இருக்க முடியாது என்பதை அறிகிறேன். என் பௌதிக உறுப்புகள், குறிப்பாக என் மூளை இந்தப் பேரதிர்வைத் தாங்க இயலாது.

எனவே நான் இந்தப் பேரமைதி நிலையில் இருந்து சாமான்ய நிலைக்குத் திரும்ப வேண்டும். அப்படித் திரும்பிய போதும், குறைந்த அளவினில் ஆகினும் இந்த இருப்புணர்வு தொடர்ந்து உள்ளது.

இந்த ஆன்மிக சக்தியைப் பற்றிய ஞானமே மனதைக் கடந்த இந்த அநுபவத்தை வெளிக் கொணர்ந்த ஒரு தாளின் மூலம் வெளிப்பட வைக்கின்றது. இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுவது சிரமமாய் இருக்கலாம். எனினும் நான் இந்த மனம் அல்ல. இந்த உடல் அல்ல என்னும் உய்த்துணர்வே இந்த அறிவின் அடிப்படை. உண்மையில், நான் என்ற எண்ணப் போக்கை நிறுத்தி வைத்து, இதில் வெற்றி பெறும்போது அத்தகு

ஆணைக்கெல்லாம் அதிபதி நானே! என உணர்கிறேன். பிரச்சினை இத்துடன் முடிகிறது. இதுவரை மறைந்திருந்த தலைவன் (நான் எனும் ஆத்மா) வெளிப்பட்டுத் தோன்றுகின்றான்.

பின்னர் தொடர்ந்த இரவுகளில், நான் யார் என்பதை ஆழ்ந்த உறக்க நிலையில் உணர முயற்சித்தேன். விழிப்பு நிலையில் முற்பட்ட 'என்னைத் தேடலிலும்' மிகச் சிரமமாய் இருந்தது. ஏனெனில் நான் அப்போது பௌதிக உடலையும், மூளையையும் ஒதுக்கிவைத்து மனதைக் கட்டுப்படுத்த முடிந்தது. ஆழ்ந்த உறக்க நிலையிலோ என்னுடைய பௌதிக ஸ்திதி வேறு ஒரு நிலையில் இருந்தது. அந்த உறக்க நிலையில் என்னால் அதைக் கட்டுக்குள் கொணர முடியவில்லை. இந்தப் போராட்டத்தில் எப்படி வெற்றி கொள்வது என்று என்னால் கணிக்க முடியவில்லை. ஆயினும் சில சமயங்களில் நான் உறக்கத்தில் ஆழ்ந்தபோது நான் எனும் ப்ரக்ஞை உணர்வை ஒருவாறாக — ஒலியில்லாத குரலைக் கேட்பது போன்று உணர்ந்தேன். ஒரு கிசுகிசுத்த குரல் இன்னும் சில காலத்துக்குள்ளேயே நீ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பாய் என்று கூறுவதுபோல் உணர்ந்தேன். எனவே அவசரப்படத் தேவையில்லை என என் உள்ளுணர்வு கூறியது.

★★★

இப்பொழுது எல்லாம் பகவானைக் காணாத சமயங்களில் கூட அவரது சாந்நித்தியத்தை உணர்ந்தேன். நான் பகவான் அமரும் தியானக்கூடத்திலிருந்து விலகியிருந்த போதும் இந்த உணர்வு தொடர்ந்தது. இது எப்படி முடிந்தது? மனது முழு அமைதியில் ஆழ்ந்தபோது, ஒரு மின்னல் ஒளிக்கீற்று அனைத்தையும் விளக்குவதுபோல, அனைத்தும் வெளிப்பட்டுத் தோன்றியது.


*பகவான் ரமணர் என்பது தினம் நான் ஆலயக் கூடத்தில் இருக்கையில் சாய்ந்திருக்கும் பௌதிக உருவம் அல்ல. அவரே இங்கு சூழ்ந்திருக்கும் பேரமைதி, பெரு மௌனம் என்பதை நான் உணர்கிறேன். இதை நான் அறிந்தவுடன் ஒரு ஆழ்ந்த அமைதிநிலையை என்னுள்ளே கொணர்கிறது. இது மனத்தைச் சார்ந்த அறிவல்ல. இது பரமசத்யமான ஓர் உணர்வு.*

*இந்த ஸத்யத்தை வார்த்தை கொண்டு விளக்க இயலாது. இதில் வாழ்ந்து, உணர்ந்து அநுபவிக்க வேண்டும். இந்த ஆத்மாநுபவத்தை தாமே பெருமையாய் தனது எண்ணத் தோற்றங்களையே உண்மையென நம்பி மனக் கோட்டை கட்டி உபதேசங்களை வழங்கும் போலி உபந்யாஸகர்களால் ஒரு பயனும் இல்லை. அவர்களது சொற்களெல்லாம் உயிரற்ற, பயனற்ற ஒன்றாகும்.*

*ஸத்யமே வாழ்க்கை. ஸத்யத்தையும் வாழ்க்கையையும் பிரிக்கவே இயலாது. இதுவரை நான் பயின்ற நூல்கள் அத்தனையுமே இந்த வகையில் பயனற்றவை என உணர்ந்து அவற்றிற்கு விடை கொடுத்து அனுப்பினேன். அவற்றுள் மெய்யான அநுபவத்தைக் கூறும் சில நூல்கள் மட்டும் எனது ஞாபகத்தில் குடிகொண்டு உள்ளன.*

*பகவானுடன் என் அநுபவங்கள் மெய்யானவையே என அவை அறுதியிட்டுக் கூறுகின்றன.*

*அவற்றிற்கு நன்றி கூறுமுகமாக அவற்றை எனது நாட்குறிப்பில் நான் குறித்து வைத்துள்ளேன். தேவையான சமயங்களில் அவை எனக்குக் கை கொடுத்து வருகின்றன. உங்களைப் போன்ற வாசகர்கட்கும் இதே உதவியை அவை செய்யக் கூடும்.*



நடுநிசி நேரத்தில் நான் ஆச்ரமத்திற்குத் திரும்பி வருகிறேன். ஆச்ரமத்தின் மதில் சுவரின் வளைவில் ஓர் உள்ளூர்ப் பூனை எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு தினமும் உணவு பெரும்பாலும் சாதமும், பாலும் தந்து அதனுடைய வெண்மை ரோமத்தைக் தடவித் தருவேன். என் ஒருவனிடம் மட்டுந்தான் அந்த வெள்ளைப் பூனை அத்தகைய நெருக்கத்தைக் காண்பிக்கும். மற்றையோரைக் கண்டால் அது ஓடிவிடும். அதனது நன்றி உணர்வை எனக்குக் காட்டுமுகமாக எனது அறைக்கு இரவில் விஜயம் செய்து, அறை முழுவதும் ஆராய்ந்து, அங்கு இரவு நேரத்தில் வரும் சிவப்பு சிலந்திகளை விழுங்கி எனக்கு ஆதரவு அளிக்கும். நாங்கள் இங்ஙனம் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டோம்.

# கனவும் பொருளும்

## டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன்

ஆதிசங்கர பகவத்பாதாள், விவேகசூடாமணியில் ஸ்வப்னங்களைப் பற்றிக் கூறுவது "ஸ்வப்னே அர்த்த சூன்யே" — "ஸ்வப்னங்கள் அர்த்தமற்றவை" என்று.

ரிஷப யோகீஸ்வாரிஷி சிவகவசம் என்னும் ஸ்தோத்திரத்தின் முடிவில் "ஹே பரமேஸ்வரா! என்னைக் கெட்ட ஸ்வப்னம், வியாதிகள் ஆகியவை கஷ்டப்படுத்தா வண்ணம் "அவற்றையெல்லாம் நாசம் செய்துவிடு" என்று பிரார்த்திக்கிறார். பாகவத மஹாபுராணம் சொல்லும் வழி: "கஜேந்திர மோக்ஷ ஸர்கத்தைப் பாராயணம் செய்வதே. வால்மீகி ராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் ஸ்ரீசீதாதேவி முதன்முறையாக ஆஞ்சநேயரைப் பார்த்தவுடன் "ஸ்வப்னத்தில் குரங்கைப் பார்த்து விட்டேனே! ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கு ஆபத்து ஒன்றும் வந்து விடக்கூடாதே" என்று பயப்படுகிறாள்.

இவற்றையெல்லாம் படித்தறியும்போது நமக்கு ஒரு கேள்வி எழுகிறது. ஸ்வப்னங்கள் ஒருவருடைய வாழ்விற்கு அவசியமான தேவையா? பலனையும் பயனையும் அளிக்குமா? மூச்சுக்காற்றுபோல் அல்லது கெடுதல்களையும் முன்கூட்டி சுட்டுகிறதா?

ஸ்வப்னம் வர யார் காரணம்? வரும் நேரம் யாது?

ஒருவருடைய மனம்தான் அவரது ஸ்வப்னங்கட்கெல்லாம் காரணம். மனம் ஆச்சரியமான ஸ்வப்ன உலகையே சிருஷ்டித்து விடுகிறது. ஒவ்வொருவரும் நாள்தோறும் மூன்று அவஸ்தகளை அனுபவிக்கிறார்கள். ஜாக்ரத் என்னும் விழிப்பு, ஸ்வப்னம், பின் சுஷுப்தி எனும் ஸ்வப்னங்கள் இல்லாத ஆழ்ந்த உறக்கம். பகலில் பல செயல்களை இவற்றின் மூலம் செய்கிறோம். இரவில் படுத்தவுடன் உறக்கத்தில் வெளிக்கரணங்களான கை, கால்கள், கண் முதலியன அடங்கி விடுகின்றன - நிம்மதிக்காக. படுத்தவுடன் இவை மட்டும்தான் செயலிழக்கும். மூக்கினால் சுவாசம் செய்வது மட்டும் தொடரும். அந்தக்கரணத்திலும் மனம் மட்டும்தான் விழித்துக் கொண்டிருக்கும். ஆழ்ந்த தூக்கமே நல்ல சுகம். அதுவே சுஷுப்தி அவஸ்தை. எல்லோரும் விரும்புவது. ஆனால் நித்திரை எனும் ஆவரணத்தால் அதை ரசிக்க, ருசிக்க இயலாது. தூங்கி எழுந்தபின்தான் "ஆனந்தமாகத் தூங்கினேன்" என்ற அனுபவம் ஏற்படும்.

மூன்று அவஸ்தைகளையும் இயக்கித் தாங்கிப் பிடிப்பது ஆத்மாவின் சைதன்யமே. ஆகவே ஸ்வப்னாவஸ்தையில் மனத்தை இயக்குவது ஆத்ம சைதன்யமே. மற்றவை எல்லாம் சுஷுப்தியில் அடங்கினாலும் சுவாசம் இருக்கும். அதேபோல் ஸ்வப்னாவஸ்தையிலும் மற்றவை அடங்கினாலும் சுவாசமும் மனமும் இருக்கும். இரண்டு அவஸ்தைகளையும் சுட்டிக்காக்கும் ஆத்மா (பதி) அதன் சைதன்யம் "அங்கெங்கெனாதபடி பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து" நமக்கு வாழ்வளிக்கும்.

ப்ரஶ்னோபநிஷத் ஸ்வப்னத்தைப் பற்றியும் அதை இயக்கும் மனதைப் பற்றியும் கீழ்க்கண்டவாறு மிக அழகாக வர்ணிக்கிறது.

*“இந்த மனதாகிய தேவன், ஸ்வப்னத்தில் தன் பெருமைகளை அனுபவிக்கிறான். கண்டதும் காணாததும், கேட்டதும், கேளாததும் அனுபவித்ததும் அனுபவிக்காததும், உள்ளதும், இல்லாததும் ஆகி* ***அனைத்தும் தானே ஆகி அனைத்தையும் காண்கிறான்.***

*அத்ர ஏஷ தே³வ: ஸ்வப்னே மஹிமானம் அனுப⁴வதி। த்³ருஷ்டம்ச அத்³ருஷ்டம்ச; ஶ்ருதம்ச அஶ்ருதம்ச; அனுபூ⁴தஞ்ச அனனுபூ⁴தஞ்ச; ஸச்ச அஸச்ச ஸர்வம் பஶ்யதி ஸர்வ: பஶ்யதி ॥ 4-5*

*ஆடல் கண்டவன் ஆடுகின்றவன். அதாவது போக்தா, போக்கியவஸ்து, இரண்டையும் மனதே சிருஷ்டிக்கிறது. உதாரணத்திற்காக ஓர் ஆசிரியர் 100 மாணவர்கட்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் காட்சி ஸ்வப்னத்தில் வருகிறது. புத்தகங்கள் மேஜை, மைக் உள்ளன. “ஸ:” என்று சொல்லப்படும் ஒரு ஆசிரியர் ஸ்வப்னத்தில் “ஸர்வ:” என்ற எல்லாமாக ஆகிவிடுகிறார். தான், பையன்கள், மைக், புத்தகங்கள், மேஜை எல்லாம் அவர் ஒருவரே. “ஸ: ஸர்வ: பவதி”. பின் “ஸ:” அவர் எல்லாவற்றையும் “ஸர்வம் தானே பார்க்கிறார் ஸ: ஸர்வம் பஶ்யதி*

*ஸ: ஸர்வ: பஶ்யதி*

*ஸ: ஸர்வம் பஶ்யதி*

*தூக்கம் கலைந்து ஸ்வப்னம் மறையும்போது எல்லாம் மறைந்துவிடுகின்றன. யார் இதுவரை ஸ்வப்னம் கண்டாரோ அவர் ஒருவரே மிஞ்சுகிறார். ஆக ஸ்வப்னம் என்பது மித்யை. பார்ப்பவன்தான் தாற்காலிக உண்மை. (வ்யாவஹாரிக ஸத்யம்). தூக்கத்தில் புத்தி மறைந்து விடுவதால், பல ஸ்வப்னங்கள் அர்த்தமற்றவைகளாகக் காணப்படும்.*

## ஸ்ரீரமணாவதாரம்

*ஸ்ரீரமண பகவானும் ஸ்ரீசுகாசார்யாளைப்போல் ஸர்வபூத ஹ்ருதயர்; ஸர்வாந்தர்யாமி, ஸர்வ சக்தர்.*

*குர்ரம் சுப்பராமய்யா பகவானின் அடியார். அவர் மனைவி இறந்துவிட்டார். வருத்தம் தாங்காத சுப்பராமய்யா, ஸ்ரீரமண பகவானிடம், "பகவானே! என் மனைவி என் கனவிலாவது வரக்கூடாதா, அருளவேண்டும்" என்றார். அருள்மழை பொழிந்தது. அன்றிரவே, திண்ணையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த சுப்பராமய்யா பகவானின் அருளால், தன் மனைவியைக் கனவில் கண்டார். அதில் அவர் மனைவி காசியில் ஓர் சத்திரத்தில் சாதுக்கள் சங்கத்தில் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருக்கிறார். ஆனந்தம். காலை சுமார் 5 மணிக்கு பகவான் டார்ச் லைட்டுடன் திண்ணைக்கு வந்து சுப்பராமய்யாவைப் பார்த்து, "என்ன, உன் தர்மபத்தினி ஸ்வப்னத்தில் வந்தாளா?" என அன்புடன் விசாரித்தார். சுப்பராமய்யாவும் பார்த்ததையெல்லாம் சொல்லி, நன்றியையும் சந்தோஷத்தையும் பகவானிடம் சொன்னார். பிறகு பகவான், "அங்கே பின்புறம் கங்கை ஓடுவதைப் பார்த்தீரா?" என்று கேட்டார். பின்புதான் சுப்பராமய்யா 'ஆம்' என்றார்.*

*இந்நிகழ்ச்சியிலிருந்து நமக்கு தெளிவாகத் தெரிவது, "பகவான் சர்வாந்தர்யாமி. இன்னொருவர் பார்க்கும் ஸ்வப்னத்தை நாம் பார்க்க வேண்டுமானால், நாமும் அவராகவே ஆகிவிடவேண்டும் அல்லவா! சுகாசார்யாள் ஜீவிகளின் இதயமாக மட்டுமல்ல, மரங்களாகவும் ஆகி விட்டார். "புத்ரேதி தன்மயதயா தரவோ பி நேது:".*

*பகவான் சுப்பராமய்யாவுக்கு குறிப்பிட்ட நாளில் ஸ்வப்னத்தை வரவழைத்துக் கொடுத்தார். ஸ்வப்னத்தில் யார் காணப்படவேண்டும் என்பதையும் நிர்ணயித்தார். சுப்பராமய்யாவின் மனைவி இந்நாளில் ஸ்வப்னத்தில்*

வரவேண்டும் என சங்கல்பித்தார். அது நடந்தது. அதனால் பகவான் சர்வ சக்திமான்.

பலனாக சுப்பராமய்யாவுக்கு மகிழ்ச்சி. இதுதான் பயன்.

முழுதும் பகவானால் பிரும்மதேவனின் படைப்பைப் போல சிருஷ்டிக்கப்பட்டது. (குர்ரம் சுப்பராமய்யாவின் அருள்நிறை அமுதக்கடல், பக்கம் 138)

குர்ரம் சுப்பராமய்யா ஒரு சத்புருஷர். அவர் அருள்பெற்றது வியப்பல்லவே.

ஒரே மேடையில் ஸ்ரீரமண பகவான், காஞ்சி மஹா ஸ்வாமிகளின் கூட்டு தர்சன அருள்

ஸ்ரீரமண பகவானையும் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாளையும் ஒரே இடத்தில் தர்சனம் செய்ய முடியுமா? ஆனால் இந்த அபூர்வ தர்சன ஆனந்தம், குர்ரம் சுப்பராமய்யாவுக்கு ஸ்வப்னத்தில் கிட்டியது.

1947-ஆம் வருடம் பகவானிடம் ஒரு அன்பர் கேட்டார்: “நீங்களும் காஞ்சி பரமாசார்யாளும் சந்தித்து சேர்ந்திருக்கிறீர்களா?” என்று. உடனே பகவானின் பதில், “நாங்கள் எப்போது தனியாக இருந்தோம். இப்போது சந்திப்பதற்கு? நாங்கள் எப்போதும் சேர்ந்தேதான் இருக்கிறோம்” என்றார். இதை நிரூபிப்பதுபோல் சுப்பராமய்யாவின் கனவில், ஒரே மேடையில் ஸ்ரீ ரமண பகவானும் காஞ்சி மஹா ஸ்வாமிகளும் சேர்ந்து தரிசனம் கொடுக்கிறார்கள். தீர்த்தப் பிரசாதம் வழங்கப்படுகிறது. கிடைக்குமா இந்த அபூர்வ பாக்கியம்! ஸ்வப்னம்தான் கொடுத்தது சுப்பராமய்யாவுக்குப் பரம ஆனந்தம் (அருள்நிறை அமுதக்கடல், குர்ரம் சுப்பராமய்யா, ப. 198, 264)

ஸ்வப்னத்தைப் பற்றி மிக ஆச்சர்யமான செய்தி ஸ்ரீரமணோதயம் ஏப்ரல் 2021 (பக்- 60-66) இதழில்

வந்துள்ளது. சப்-ரிஜிஸ்திரார் நாராயண ஐயர் தம்பதிகள் குமாரியின் திருமண நிச்சயதார்த்தற்கு ஏற்பாடு ஆகிவிட்டது. ஆனால் நடத்துவதற்குத் தேவையான பணம் இல்லை. பிறரிடம் உதவி நாட விருப்பமில்ல. பரம பக்தர்களான தம்பதிகள் ஸ்ரீரமண பகவானிடம், ஆசீர்வாதம் பெற நேரில்சென்று தர்சனம் செய்தனர். பணத் தேவையால் நிச்சயதார்த்தம் நடக்காமல் போக வாய்ப்பு இருந்தும் அவர்கள் சங்கோஜத்தால் அதைப்பற்றி பகவானிடம் ஒன்றும் கூறவில்லை. என்ன ஆச்சர்யம்! மறுநாற் அகமதாபாத்தில் இருக்கும் முன்பின் தெரியாத ஒருவரிடமிருந்து தேவையான பணம் தந்தி வழியாக வந்துவிடுகிறது. நிச்சயதார்த்தம் நன்கு நிறைவேறியது. சப்-ரிஜிஸ்திரார் நாராயணய்யர், அகமதாபாத் அன்பரிடம் நன்றிகூறி, எங்ஙனம் பணம் அனுப்பினீர் என விசாரித்ததில், அவர் எழுதியது. "என் கனவில் பகவான் தோன்றி, உங்களுக்குப் பணத்தை அனுப்பச் சொல்லி உங்கள் விலாசத்தையும் கொடுத்தார். உங்களை எனக்குத் தெரியாது. என்ன காரணத்திற்காக பணத்தை அனுப்புகிறேன் என்றும் தெரியாது" என்றார். அய்யரும் அவர் மனைவியாரும் மெய்சிலிர்த்துப் போயினர். என்னே பகவானின் கருணை! அடியார் நேரில் கேட்காவிட்டால்கூட தானே ஒருவருடைய ஸ்வப்னத்தில் காட்சி கொடுத்து மிகப்பெரிய அனுக்ரஹத்தை வழங்கியிருக்கிறாரே! ஸ்வப்னமல்லவா இதைச் செய்தது!

**இதிஹாஸம்: வால்மீகி இராமாயணத்தில் திரிசடையின் ஸ்வப்னம்:**

அசோகவனத்தில் சீதாபிராட்டியை ராக்ஷஸிகள் கொடுமைப்படுத்தும்போது நல்ல குணமுள்ள திரிசடை சீதாராமர்களைப் பற்றிக் கனவு காண்கிறாள். ஸத் ஆன விபீஷணனின் மகளானதால் அவளுக்கு இந்தக் கனவு ஏற்பட்டிருக்கலாம்.

*ஸ்வப்போ ஹ்யத்ய மயா திருஷ்ட: தாருணோ*
*ரோமஹாஷண:*
*ராக்ஷஸானாம் அபாவாய பர்த்துரஸயா ஜயாய சி*
***(சுந்தரகாண்டம் 27)***

*திரிசடை ராக்ஷஸிகளிடம் சொல்வது: "இந்த சீதையின் கணவர் ஜயமடையப் போகிறார். எல்லா ராக்ஷஸர்களும் இல்லாமல் அழிந்து விடுவார்கள்" என்று என் கனவில் ஸ்ரீராமபிரான் விஷ்ணுவாகவே மாறிவிடுகிறார். மிக ருசிகரமான விஷயம்: விஷ்ணுவாக மாறியதைப் பற்றிய சுலோகம்: ஸ்ரீவத்ஸ வக்ஷா: நித்யஸ்ரீ: அக்ஷய்ய: சாஸ்வதோ த்ருவ: இதே சுலோகத்தையே யுத்த காண்டத்தில் மண்டோதரி ராமரைப் பற்றிச் சொல்லும்போது சொல்கிறாள். ஒருபதம் தான் அக்ஷய்ய என்பது அஜய்ய என்று மாறியுள்ளது. ஸ்ரீவத்ஸ வக்ஷா: நித்யஸ்ரீ: அஜய்ய: சாஸ்வதோ த்ருவ: அதிலும் ஒரு எழுத்து 'க்ஷ' என்பது 'ஜ' ஆகியிருக்கிறது. கனவில் திரிசடை கண்டு சொன்னதை மண்டோதரி நேரில் பார்த்த அனுபவத்தில் சொல்கிறாள். ஆகவே இதை வெறும் கனவாக உதறிவிடலாமா? பின்பு அதற்கும் மேலே சென்று ஸ்ரீராமபிரானை திரிசடை பரம்பொருளாகவே காண்கிறாள். இதுவும் உண்மை. பரம் பிரும்ம பரம் சத்யம் பரம் ஞானம் பரம் தாப: அடுத்த காட்சியில் தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள் முதலியோர் சீதாராம பட்டாபிஷேகத்தைக் கோலாஹலமாகக் கொண்டாடுகிறார்கள். மறுபடி காட்சி மாறுகிறது. ஸ்ரீராமபிரான் ஸ்ரீசீதாபிராட்டியுடன் புஷ்பக விமானத்தில் வடதிசை நோக்கிச் செல்கிறார்.*

*இராவணன் முதலிய ராக்ஷஸர்கள் எல்லாவற்றையும் இழந்து, மொட்டைத்தலை, எண்ணெய் உடம்புடன் தென்திசை நோக்கிச் செல்வதையும், விபீஷணன் மட்டும் வெண்பட்டு உடுத்தி வெள்ளை யானையில் ஏறி*




வடதிசை செல்வதையும் குறிப்பிடுகிறாள். அவருடன் நான்கு ராக்ஷஸர்கள் செல்வதையும்கூட கனவில் காண்கிறாள். ஒரு குரங்கு இலங்கைக்குத் தீ வைத்துக் கொளுத்தியதையும் பார்க்கிறாள். இலங்கையே கடலில் வீழ்ந்து அழிந்து விடுகிறது.

த்ரிசடை ஸ்வப்னத்தில் அவர் பார்க்காத விஷயம் ஒன்றும் இல்லை. இராமாயணத்தையும் பட்டாபிஷேகத்தையும் அதற்கும் அப்பாற்பட்ட ஸ்ரீராமபிரான் மஹாவிஷ்ணுவே. அதற்கும்மேல் பரம்பொருளே என்ற ஞானத்தையும் ஒரு ஸ்வப்னத்தில் த்ரிசடை அனுபவிக்கிறாள் என்றால் என்ன பாக்கியம் செய்தாளோ! என்று வியக்கத் தோன்றுகிறது. அவள் கண்ட காட்சிகளில் பல உண்மையாக நடக்கின்றன. ஆகவே இந்த ஸ்வப்னம் பிரயோஜனமில்லை என்று கூறமுடியுமா? த்ரிசடை ஒரு நல்ல ஆத்மா.

# “மணி அண்ணா” — மணியெனப் புகழ்வதல்லால் மற்றுமொரு மொழிதல் உண்டோ

***ஆகுரா***



*பகவான் ரமணரின் பூர்வாசிரம இளைய சகோதரர் ஸ்வாமி நிரஞ்சனானந்தர் — ஆச்ரம முதல் சர்வாதிகாரி — ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நேர்மையான நிர்வாகியாக ஆஸ்ரம பணியில் தன் இறுதி மூச்சுவரை பணியாற்றியவர்.*

*அவரது பணியை பகவான் அருளினால் பிறந்த அவரது ஒரே மகனான திரு. வேங்கடராமன் அவர்கள் பக்தர்களின் வேண்டுகோளின்படி, நீதிமன்ற*

*வழிகாட்டுதலுடன் 42 ஆண்டுகள் தலைமையேற்று சிறப்புற பணியாற்றியவர். அவர் காலத்தே ஆலமரமாகத் தழைத்து வளர்ந்தது ஸ்ரீ ரமணாச்ரமம். அவருக்கு மூன்று மகன்கள்; நான்கு பெண்கள்; ஆக ஏழு குழந்தைகள். அனைவருக்கும் பகவான் ரமணரே பெயர் சூட்டினார். திரு. சுந்தர ரமணன், திரு. கணேசன் என்ற இரு மூத்தவர்களுக்கு அடுத்து திருவண்ணாமலையில் 8-2-1939-இல் பிறந்த ஆண் மகவுக்கு, பகவான், சுப்பிரமணியன் என்று பெயர் சூட்டினார். மணி என்று குடும்பத்தினராலும், மணி அண்ணா என்று ரமண நண்பர்களாலும் அவர் அன்புடன் அழைக்கப்பட்டார். இளமையில் மணி அண்ணா தனது அண்ணன்மார்களுடன், பகவான் முன்னிலையில் விளையாடி, சில நேரங்களில், ஆச்ரமத்திலேயே உறங்கி விடுவதும் உண்டு.*

*இப்படி ஆச்ரம நிழலில் வளர்ந்து பிற்காலத்தே பொறியியல் பட்டம் பெற்று மும்பை மாநகரில் தனியார் நிறுவனத்தில் உயர்ந்த பதவி வகித்து, அடிக்கடி திருவண்ணாமலை வந்துசெல்வார். 1969-ஆம் ஆண்டு பகவான் பக்தையான திருமதி. ரமணி அவர்களை மணம் புரிந்தார்.*

*1984-ஆம் ஆண்டு தன் தாயார் நாகலட்சுமி அவர்களின் மறைவுக்குப் பின்னர் தன் தந்தைக்கு உதவியாக ஆச்ரம பணியாற்ற எண்ணினார். சாந்தி மற்றும் ரமணன் ஆகிய இரண்டு பிள்ளைகளை அக்காலகட்டத்தில் வளர்த்து ஆளாக்க வேண்டிய நிலை அவருக்கு இருந்தது. ஆயினும் தன் குடும்ப நலம் கருதாது, தான் வகித்து வந்த உயர் பதவியைத் துச்சமென மதித்து 1985-ஆம் ஆண்டிலேயே முன்-ஓய்வு பெற்று, திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். தன் தகப்பனார் நிர்வாகத் தலைவராக இருக்க, அவருக்குப் பக்கபலமாக ஆசிரமப் பணியாற்றினார். இதற்கு முன்பே*

*திரு. கணேசன் அவர்கள் (இரண்டாவது புதல்வர்) தனது ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் பணியைத் தியாகம் செய்துவிட்டு ஆசிரமப் பணியில் தந்தையுடன் சேர்ந்து விட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1992-ஆம் ஆண்டு திரு. மணி அவர்களின் மூத்த தமையனார் திரு. சுந்தர ரமணன் ஓய்வுபெற்று ஆசிரம பணியில் சேர்ந்து கொண்டார். திரு. வேங்கடராமன் அவர்களுக்குப் பின்னர் திரு. சுந்தர ரமணன் அவர்கள் தலைமைப் பதவி ஏற்க, அவருக்கும் திரு. மணி அவர்கள் உறுதுணையாக இருந்து ஆசிரமப் பணியாற்றினார். ஆச்ரம வளாக பசுமைப் புரட்சி, பசுக்கள் பராமரிப்பு மராமத்து வேலைகள் போன்ற அன்றாட அனைத்து நிர்வாக அலுவல்கள் அவரது மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்றது. ஆசிரமத்தின் உள்ளும், மலை மீதும் பலவகையான மரங்களை நட்டு, சுற்றுப்புற பசுமையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றினார். ஆச்ரமத்தின் வெளியிலும் பல்வேறு தோட்டங்கள், கட்டிடங்கள் வளர பெரும் முனைப்பு காட்டினார்.*

*ஆச்ரம நிர்வாகத்தின் கீழ் பல ஊர்களில் கட்டிடங்கள் எழ தனது தனயனுக்குத் தோள் கொடுத்து பணியாற்றினார். பெரும் பொருட்செலவில் பகவான் பயன்பாட்டில் இருந்த அரிய பொருட்களைப் பாதுகாக்கும் வகையில் ஆவண அருங்காப்பகம் உருவானது. அதற்கான பணிகளில் மிகவும் ஆர்வம் காட்டினார். 1985-ஆம் ஆண்டு முதல் தனது இறுதி மூச்சு வரை அனைத்து ஆசிரம வளர்ச்சி பணிகளில் அவரது அயராத உழைப்பைக் காட்டினார்.*

*2019-ஆம் ஆண்டு ஆச்ரம பாடசாலையில் தனது சதாபிஷேகம் கொண்டாடினர். அதே ஆண்டு அன்பான துணைவியார் திருமதி. ரமணி அவர்கள் அவரை விட்டுப் பிரிந்தார். பகவான் அருளாலும், அவரது உபதேசங்களை*

நன்கு அறிந்திருந்ததாலும், மணி அண்ணா இப்பிரிவை எளிதில் ஏற்றுக்கொண்டார்.

கடந்த ஜூலை மாதம், சற்றே உடல் நலம் குன்றிய மணி அண்ணா, வீட்டில் ஓய்வில் இருந்தார். ஓய்வுக்குப் பின்னர் ஜூலை 18. 2022 அன்று காலை ஆசிரமம் வந்து ஆச்ரம பணிகளில் ஈடுபாடு காட்டினார். அவரது நீண்ட நாள் விருப்பமான பகவான் நிர்வாண அறை மற்றும் பழைய தியான ஹால் இரண்டிலும் உள்ள சாதாரண பிம்பப் பிரதிபலிப்பு உள்ள கண்ணாடிகள் பிரதிபலிப்பு அற்ற கண்ணாடிகளாக மாற்றப்பட சில ஆலோசனைகள் வழங்கினார்.

பின்னர் ஆவண அருங்காப்பகம் கண்ணன் மற்றும் சிவா ஆகிய அலுவலக பணியாளர்களிடம் அன்பாக நீண்டநேரம் அவர்களைத் தன் முன் இருத்தி நீண்ட நேரம் உரையாட வற்புறுத்தினார்.

பின்னர் அடுத்த நாள் ஜூலை 19 அன்று காலை நெஞ்சு எரிச்சல் என்பதாக உணர்ந்தார். ஆசிரம மருத்துவர் பரிசோதித்து மருத்துவமனையில் சேரலாம் என்று கூறியதை வேண்டியதில்லை என்று தவிர்த்து விட்டார்.

அதன் பின்னர் அவர் ஆலோசனைப்படி பிரதிபலிப்பற்ற கண்ணாடிகள் பழைய தியான ஹால் மற்றும் பகவான் நிர்வாணம் அடைந்த அறை இவற்றில் மாற்றப்பட்டதா என்பவற்றை திரு. கண்ணன் மூலம் தொலைபேசி வாயிலாக அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

ராமு ஆசாரி அதைச் சரியாக முடித்த விபரம் அறிந்து கொண்டார். “ஒன்றுக்கு இருமுறை சரிபார்த்தீர்களா திருப்தியாக உள்ளதா எனக் கேட்டு”, நன்றாக அமைந்துள்ளது என்று உறுதிப்படுத்திய பின்னர் அமைதியானார்.

*அடுத்து பகவான் சன்னதி மற்றும் தாயார் சன்னதியில் திரைச்சீலைகள் மாற்றப்படவேண்டியது சம்பந்தமாக கண்ணன் மற்றும் ஆலய பூஜை செய்யும் ரவி பட் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டார். திரு. ரவி பட் அவர்களின் ஆலோசனை ஒருபுறம் இருக்க, மணி அண்ணா அவை எப்படி அமைய வேண்டும் என்று ஆலோசனை கூறிவிட்டு அவரது தாயார் திருமதி நாகலட்சுமி அம்மாள் அறையில் ஓய்வு எடுத்தார். மாலையில் அங்கு வந்த ராமு ஆசாரியிடம் கண்ணாடிகள் நன்கு பொருத்தியதற்குப் பாராட்டுத் தெரிவித்தார். அடுத்து இருந்த பெருமாள் எனும் வேலைக்காரரிடம் தனது நாற்காலி சரியாக இல்லை. ஈஸி சேர் கொண்டு வரச் சொல்லிவிட்டு அமர்ந்தவர், நாற்காலியில் இருந்து சரிந்து விழுந்தார். அங்கு வந்த அவரின் தங்கை திருமதி சரஸ்வதி மற்றும் அங்கு இருந்தவர்கள் அவசரகதியில் இயங்கினர். ஆச்ரம நிர்வாக மேலாளர் திரு. கிருஷ்ணன் அவர்களுக்குத் தகவல் பறந்தது. அவர் உடனே ஆஸ்ரம மருத்துவரை அழைத்து வந்து பரிசோதித்து, அவசர அவசரமாக அண்ணாவை அருணை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு 15-க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் உதவிக்கு வந்துவிட்டனர். ஒன்றும் பயன் தரவில்லை. சுமார் மலை 05-30 மணிக்கு உடலை விட்டு உயிர் பிரிந்து பகவானிடம் கலந்து விட்டது.*

*மணி அண்ணா சிறுவனாக இருந்தபோது அவரது நான்காம் வகுப்பு ஆசிரியர் சிறுவர்களுக்காக, பகவானின் உபதேசம் தாங்கிய ஒரு ஓரங்க நாடகத்தை பகவான் முன்பு நடத்தினார். அதில் பங்கேற்ற மணி அண்ணா நாடகத்தின் இறுதிக் காட்சியில், “இந்த ரமண புனிதப் பணிக்கு எனது இறுதி மூச்சு வரை அயராது உழைப்பேன்“, என்று உணர்ச்சிவயப்பட்டு மார்தட்டி நடித்தார்.*

*பகவான் ரமணர் "அடடா, மணி 'மணி'யாகப் பேசுகிறானே" என்று சிலாகித்துக் கொண்டாராம்.*

*மணி அண்ணா அன்று சிறுவனாகிலும் பகவான் முன்பு எடுத்த சங்கல்பம் ஆயிற்றே! நிறைவேறாது போகுமா! ஆம், மணி அண்ணாவின் இறுதி மூச்சு ரமண ஆசிரமப் பணியுடன் அடங்கியது.*

*அன்னாரின் பூதவுடல், அவரது அருமை மகன் ரமணன் (வெளிநாட்டில் இருப்பவர்) வந்தபின், அண்ணாவின் பிரிவைத் தாங்காத மருமகன் பரத், மகள் சாந்தி, பேரக் குழந்தைகள் மற்றும் ரமண அன்பர்கள், உறவினர்கள், ஆச்ரம பணியாளர்கள் அனைவரின் துயரம் தாங்க இடுகாட்டிற்கு ஏந்திச் செல்லப்பட்டு எரியூட்டப்பட்டது.*

*"ஆச்ரம மேன்மை ஒன்றே தன் லக்ஷியமாகக் கொண்டு தினம் 15 மணிநேரம் ஆசிரமப் பணியிலேயே தன்னை அர்ப்பணித்துள்ள சுயநலமற்ற ஒரு சிறந்த ரமணத் தொண்டன்" என்று தனது மூன்றாவது மகன் மணியைப் பற்றி 42 ஆண்டுகள் தலைவராக ஆச்ரம பணியாற்றிய சுவாமி ரமணானந்தா அவர்கள் தனது சுய சரிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இவர்களின் மொத்தக் குடும்பமே தன்னலமற்று ஸ்ரீ ரமணாச்ரமப் பணியாற்றியவர்கள். இப்பணியில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை.*

*பகவான் ரமணரின் தம்பி சுவாமி நிரஞ்சனானந்தர் முதல், அவரது மகன் வெங்குட்டு என்று அன்போடு பேசப்பட்ட வேங்கடராமன், மற்றும் அவர் மக்கள் சுந்தரம் அண்ணா, கணேசன் அண்ணா, மணி அண்ணா அனைவரும் தங்கள் வளமான உலக வாழ்க்கையைப் பகவான் பணிக்காக, அவர்தம் பக்தர்களின் சேவைக்காக, அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இன்று ஆஸ்ரமத்தின் தலைமையேற்றுள்ள திரு Dr. வெங்கட்*

*S. ரமணன் (ஆனந்த்) அவர்களும் தனது வளமான சொந்த வாழ்க்கையைத் தியாகம் செய்து, தன் குடும்ப நலம் கருதாது, ஆசிரமத் தலைமை ஏற்று வாழையடி வாழையாக அவர் வந்த குலத்தின் தன்னலமற்ற உயர் குணத்தை காத்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

*பக்தர்களை இனம் கண்டுகொண்டு இன்முகத்துடன் வரவேற்பதும், அவர்களின் குடும்பத்தினரை நினைவில் நிறுத்தி அவர்களின் நலத்தையும் வினவுவதும் மணி அண்ணா அவர்களின் குறிப்பிடத்தக்க சிறப்பு குணம். பல்வேறு இடங்களில் இருந்து வரும் பக்தர்கள் ஆசிரமத்திற்குள் நுழையும்போதே, அவர்களை அடையாளம் கண்டு ஒரு இன்முகம் வரவேற்கும் போது, அவர்கள் தங்கள் தாய் வீட்டிற்கு வந்த ஒரு சந்துஷ்டி அடைவர். மணி அண்ணாவின் மற்றைய சிறப்பு பங்களிப்பு, தனது தந்தை, மூத்த அண்ணன், மற்றும் அண்ணன் மகன் என மூன்று தலைமுறைக்கான நிர்வாகத் தலைமைக்கு இரண்டாம் இடத்தில் இருந்து கடமை ஆற்றினாலும், தான் தொண்டாற்றுவதில் முதன்மையே வகித்தார் எனலாம். 'கண்டிப்பும் கனிவும் மிக்க பார்வையுடன்' ஆச்ரம வளாகத்தில் வளையம் வந்த ஒரு ஆஸ்ரம நிர்வாகியை இழந்தது ஒரு பெரும் இழப்புதான். மேலும் பகவானின் பார்வையில், மேற்பார்வையில் வளர்ந்த தலைமுறையினரில் இன்னும் ஒரு பாக்கியவானை ரமண அன்பர்கள் இழந்துவிட்டனர். என்றும் நமக்கு ரமண பகவானே துணை. மணி அண்ணாவைப் பிரிந்து வாடும் உறவுகளுக்கும் ரமணரே ஆறுதல்.*

*மரணபயம் மிக்குள அம்மக்கள் அரணாக*
*மரணபவம் இல்லா மகேசன் — சரணமே*
*சார்வர்தஞ் சார்வொடுதாஞ் சாவுற்றார் சாவெண்ணஞ்*
*சார்வரோ சாவா தவர்நித்தர்.*

*— உள்ளது நாற்பது, இரண்டாம் மங்கல வெண்பா*

# முருகனாரோடும் ஸ்ரீரமண பகவானோடும் தினம் தினம்

**ரமண சுந்தரராஜன்**

## 1. கருத்தைக் கடந்த கருத்தன்

மனித வாழ்க்கை மிகவும் சிக்கலாக உள்ளது. ஒன்றும் புரிவதில்லை. புரியாத நிலையிலிருந்து, புரிந்ததுபோல் இருந்து, புரியாமலேயே போய் விடுகிறது மனித வாழ்வு என்று கிருஷ்ண பகவான் குறிப்பிடுகிறார். நாம் பல கருத்துகளில் சிக்கி, நம்மையே கருத்துகளால் இறுகக் கட்டிக் கொண்டு, மூச்சுத் திணற வாழ்கிறோம். ச ா தி யு ம் , மதமும், மொழியும் நாடும் இனமும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் காலமும் இடமும் எல்லாம், எல்ல்லாம், நாம் நினைக்கத் தொடங்கிய உடனேயே நம்மைக் கட்டிப் போடத் தொடங்குகின்றன.

எந்தக் கருத்தும் இல்லாமல் எல்லாவற்றையும் அப்படியே பார்த்து, பேசினார் பகவான். கருத்துகளைக் கடந்து பகவான் நிற்கிறார். அதனால் பகவானைக் கருத்தைக் கடந்த கருத்தன் என்கிறார் முருகனார். எந்தக் கருத்தையும் கடந்து செயலாற்றிய கர்த்தர் ரமணரின் வாழ்வைக் கடைப்பிடித்து, எதிலும் கருத்து இல்லாமல் வாழ்வதே சரியான ரமண வாழ்வு என்கிறார் முருகனார்.

கருத்தைக் கடந்த கருத்தனுக்கு ஊணாக்
கருத்தற்று ஒழிதல் கதி.

— *ஸ்ரீரமண ஞானபோதம் 1.30*

## 2. அறிவிலே உள்ளான், அறிவாக உள்ளான்

பகவான் தான் நம்மை அழைத்தார், வந்தோம். பகவானை மிகவும் மதிக்கிறோம்; போற்றுகிறோம்; வணங்குகிறோம். பகவானே நம் வாழ்க்கையை

நடத்துகிறார். தினமும் அவரது அருளைக்கண்டு வியக்கிறோம். இவ்வளவுக்கும் இடையில், நமக்கும் பகவானுக்கும் இடையே உள்ள இணைப்பு எது என்று யோசித்துப் பார்த்தால், எல்லாவற்றுக்கும் மேலாக, பகவானின் பேரறிவு தான் நம்மை எப்போதும் பகவானிடம் ஈர்த்து அவருக்கு ஆட்படுத்துகிறது. இதனை நுட்பஒட்பம் என்கிறார் முருகனார். கூர்மையான நுண்ணிய அறிவு என்பது இதன் பொருள். பகவானைக் கடவுள் என்ற கருத்திலிருந்து விலக்கி, ஒரு மனிதராக எண்ணும்போது, உலகம் கண்ட தத்துவ ஞானிகளில் ஒப்புயர்வு அற்ற ஓர் உயர்ந்த இடத்தில் பகவான் விளங்குவதை அறியலாம்.

இன்றும் கூட, பகவானின் படத்தின் அருகில் அமர்ந்து கொண்டு, ஞான நூல்களைப் படியுங்கள். நீங்கள் படிப்பதை பகவான் கூர்ந்து கவனிப்பார். உங்கள் சந்தேகங்களுக்கு உடனடியாக பதில் கூறும் பெரும் பேராசிரியராக பகவான் உங்கள் அருகிலேயே இருந்து திகழ்வார். பகவான் அறிவிலேயே இருக்கிறார். அறிவாகவே இருக்கிறார். அறிவிலிருந்து பிரியாமல் இருக்கிறார்.

ப்ரக்ஞானம் ப்ரஹ்ம; அதாவது பேரறிவே பெரும்பொருள் என்ற வேத வாக்கியத்தை நிரூபித்தவாறே நிற்கிறார்.

அறிவிலே உள்ளான் அறிவாக உள்ளான்
பிறிவுபடா எம்பிரான்.

*— ஸ்ரீரமண ஞானபோதம் 1.132*

## 3. தன் அறிவால் என் அறிவைத் தான் கரந்தான்

வாழ்க்கை எண்ணங்களால் ஆனது. நமக்குப் பிடித்த எண்ணங்களே கொள்கைகளாகின்றன. கொள்கைகளைக் கடைப்பிடிப்பது தான் குறிக்கோள்மிக்க வாழ்வு. கொள்கைகள், எண்ணங்கள், குறிக்கோள் எல்லாமே

அறிவு சார்ந்தவையாக இருக்கவேண்டும். அறிவுக்கும், அடிப்படையில் அன்பு இருக்கவேண்டும். அன்பும் அறிவும் இணைந்த வாழ்வு அமோக வாழ்வாக அமையும். அன்பையும் அறிவையும் கொண்டு கொள்கைகளை வகுத்து வாழும்போது நமது செயல்கள் நமக்கு அபரிமித ஆனந்தத்தை அளிக்கும். நாம் அறிவு ஜீவியாய் கர்வம் கூடக் கொள்கிறோம். இந்தச் சூழலில் பகவான் வருகிறார்.

உலக வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் உணர்ச்சியால் அணுகுவதை விட்டு, தன் பேரறிவைக் கொண்டு நிரப்புகிறார். நாம் கட்டிய உலகாயத வாழ்வுக் கோட்டை ஆட்டம் காணுகிறது. உலகமே இல்லை, இதிலென்ன இவ்வளவு ஆட்டம் என்று பகவான் அறையும்போது, நாம் கலங்கிப் போகிறோம்.

பகவான், அன்பையும் அறிவையும் குழைத்து அமுத வார்த்தைகளை ஊட்டும் போது, நம் பழைய அறிவுக் கோட்டை அடியோடு பெயர்ந்து விழுந்து விடுகிறது. பகவானின் எண்ணங்களே நம் எண்ணங்களாய், நம் கொள்கைகளும், குறிக்கோளும் பகவானின் கொள்கைகளாய், குறிக்கோளாய்ப் புத்துணர்ச்சியோடு புதுப் பொலிவாய் வாழ் கிறோம். இதுதான் உண்மை அறிவு, உண்மை அன்பு, உண்மை வாழ்வு என்று, என்றும் உள்ள ரமணனோடு இணைந்து இன்புறுகிறோம்.

*தன்அறிவால் என்அறிவைத்*
*தான்கரந்தான் சுத்தஅருள்*
*பொன்னடியே உண்மைப் புகல்.*

*— ஸ்ரீரமண ஞானபோதம் 1.24*

## 4. என்றும் ஒரு தன்மைத்தா ஏய்ந்த அருட் போத உரு

நாம் வகுத்துக் கொண்ட கொள்கைகளை வாழ்வில் கடைப்பிடிப்பது என்பது மிகவும் கடினமாகத் தான்

இருக்கிறது. நம்மிலிருந்து நாம் அசைந்து கொடுப்பது அன்பு ஒன்றுக்காக மட்டுமே இருக்க வேண்டும். அன்பும் அருளுமே அறிவாகும். பகவான் அன்பாய், அருளாய், அறிவாய் விளங்குகிறார். நிலைத்த அன்பு அருளாய் விரிகிறது. அதுவே சரியான அறிவாகிறது. அதனால் பகவான், அருள்ஞான உருவாகவே வாழ்கிறார். **பகவானின் அன்பில், அருளில் எந்த மாற்றமும் எந்நாளும் இருக்காது.**

நாம் ஆயிரம் குணங்களோடு பகவானை அணுகுகிறோம். பகவான் நம்மை அன்பென்னும் அருள் வலையில் கட்டிப்போட்டு, மெய் மறக்கச் செய்கிறார். ‘அங்ஙனே ஆவுட்டே’ (அப்படியே எனக்கும் உங்கள் நிலை சித்திக்கட்டும்) என்று நாராயண குருவைப் போல் பகவானிடம் நம்மில் அன்பு நிலை நிலைக்க வேண்டுவோம். என்றும் அன்பென்னும் தன்மையில் நிலைத்து, திரியாது வாழும்போது, பகவானின் பெருநிலையில் நாமும் என்றும் நிலைத்திருப்போம்.

**என்றும் ஒரு தன்மைத்தா ஏய்ந்த அருட்போத உரு**
**அன்றி உயிர்க்கு இல்லை அரண்.**

— *ஸ்ரீரமண ஞானபோதம் 1.50*

## 5. கற்பனையை மாற்றினான்

‘ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்’ என்ற பெயரில், மனிதநேய எழுத்தாளர் திரு. ஜெயகாந்தன் அவர்கள் ஒரு நாவல் எழுதினார். ஆம். ஒவ்வொரு மனிதனும் ஒரு மன வீட்டைக் கட்டிக்கொண்டு, ஒரு கற்பனை உலகத்தையும் படைத்துக் கொண்டுதான் வாழ்கிறான். நிஜ வாழ்வை விட, கற்பனை வாழ்வு மிகுந்த மகிழ் வளிக்கிறது. ஆனால், கற்பனை வாழ்விலேயே வாழ்ந்து மடிந்து உங்கள் உயிரைத் தற்கொலை செய்து கொள்கிறீர்கள் என்கிறார் பகவான்.

**“உலகக் கற்பனை வாழ்விலிருந்து விடுபட்டு, உண்மை வாழ்வை வாழுங்கள்; உண்மையைத்**

**தேடினால், அதுவே வந்து உங்களைப் பேருண்மைக்கு, பேரறிவுக்கு, பேரன்புக்கு, பேரருளுக்கு இட்டுச் செல்லும்." இது பகவானின் அருள்வாக்கு.**

பகவானின் அருள்வாக்கைப் பின்பற்றினால், அதுவே உண்மைச் செல்வம் அளிக்கும். பரம ஞான வாழ்வைக் காட்டும். காண்பன எல்லாமே கற்பனையாய்த் துலங்க, பழைய கற்பனைகளும் கனவுகளும் கலைந்து போகும். கற்பனைகளைக் கடந்து பேரின்ப வாழ்வை அனுபவிக்கத் தொடங்குவோம்.

*கற்பனையை மாற்றினான் கண்ணார் கழல் வடிவச்*
*சிற்பரம் என் உண்மைத் திரு.*

*— ஶ்ரீரமண ஞானபோதம் 1.2133*

## 6. எண்ணாமல் எண்ணி இருப்பார்

நினைப்புக்கு இடம் கொடாது இருப்பதே தியானம் என்கிறார் பகவான். பகவான் சொல்வது புதுவகை தியானமாக இருக்கிறது. யாரும் சிந்திக்காததை, விளக்கிச் சொல்லாததை, செய்யாததைச் செய்தவர் பகவான். எண்ணங்களே இல்லாமல் இருப்போம் என்று முயன்று பார்க்கிறார் முருகனார்; முடியவில்லை. எல்லா எண்ணங்களையும் விட்டாலும் கண்ணெதிரே, பொய்யில் மெய்யாய்ப் பொலியும் பகவான் தெரிகிறார். மெய்யாய், பொருளாய்த் தெரியும் பகவானும் ஒரு பொருட்டு அல்ல என்று முருகனாரால் ஒதுக்க இயலவில்லை. பகவானைப் பார்க்கிறார், எண்ணங் கள் பகவானையே சுற்றுகின்றன. மேலும் மேலும் பகவானையே சுற்றும் எண்ணங்கள் திடீரென்று நின்று விடுகின்றன. எண்ணமே இல்லாமல் பகவானின் மோன நிலையில் ஒரு முனைப்பும் இல்லாமல் வாழத் தொடங்குகிறார் முருகனார். மோனமே சகலமும் என்று உணர்கிறார். அடைய வேண்டியதை அடைந்து முருகனார் ஆனந்தமடைகிறார்.

**வேறு எண்ணங்கள் இல்லாமல், எண்ணங்களே அற்ற பகவானை எண்ணினால், எண்ணமற்ற மோன உபசாந்த, சுகபோத வாழ்வு கிட்டும். இதுவே பகவானை அடைய, பரமார்த்த வழி என்று, தான் உணர்ந்ததை நம்மோடு பகிர்கிறார் முருகனார்:**

**எண்ணாமல் எண்ணி இருப்பாருக்குஅன்றிமற்று**
**ஒண்ணாது உடையான் பதம்.**

*— ஸ்ரீரமண ஞானபோதம் 1.81*

## 7. நண்ண எளிமையான்

எனக்கு இந்தச் சொல்தொடர் மிகவும் பிடித் திருக்கிறது. முருகனார் பகவானைச் சரியாகப் படம் பிடித்திருக்கிறார்.

இந்த இரண்டு வார்த்தைகள் கூட, எளிமையும் இனிமையுமாகத் தான் உள்ளது. நான்கு பேர் நம்மை நெருங்கவும், பழகவும், நேசிக்கவும் வாழ்தல் இனிய வாழ்வு. தூய மனத்தோடும் தூய அன்போடும் பகவானை நெருங்குங்கள். பகவான் நன்றாகப் பேசுவார், பழகுவார்.

நீ வேறு நான் வேறு அல்ல என்ற அனன்னிய பாவமே இறை இயல்பு. இதனை பகவானிடம் இன்றும் இயல்பாகக் காணலாம்.

எந்த வேறுபாடும் இல்லாமல் எல்லாருடனும் எளிமையாய், இனிமையாய், பண்பாய் நடப்போம். எளிமையில் தன் அரிய அழகை வெளிப்படுத்தும் பகவானைப் போல் அருமையாக வாழ்வோம்.

ஸ்ரீரமண ஞானபோதம். 1.158-ஆம் பாடல் முழுவதுமே இனிமையாக இருப்பதைப் பாருங்கள்:

**நண்ண எளிமையான் ஞான அருட்குருவா**
**வண்ணம் அழகியான் மல்கு சொரூபமாக**
**எண்ண இனிமையான் எண்ணமற்ற உள்ளமாத்**
**திண்ண உறுதி சேர் சித்சொருபப் பெம்மானே.**

*— ஸ்ரீரமண ஞானபோதம் 1.158*

குறிப்பு : நான்கு நாட்களாக, பகவானோடு மன வேற்றுமை. பேச்சு வார்த்தையில்லை. பக்கத்தில் போய் அமர்ந்தால், பேசாமல் இருப்பாரா என்ன, நண்ண எளியவர் தானே என்ற வீராப்பில் இருக்கிறேன்.

## 8. நல்லார் தமக்கு நனி நல்லன்

பொல்லார் தமக்கு மிகப்
பொல்லானே போல்கின்றான்.

— *ஸ்ரீரமண ஞானபோதம் 1.167*

பகவானைப் பற்றி நான் சொல்வதெல்லாம் உண்மையில் இறைவனின் குணங்கள், இயல்புகள் தாம். பகவான் இறைவன் தான் என்பதற்கு இறைத்தன்மைகள் பகவானிடம் முழுமையாகப் பொருந்தியிருப்பது தான் முதற் காரணம். முருகனார், பகவானின் கொள்கைகளிலிருந்து சிறிதும் பிறழாது, தன் பழைய குணங்களை யெல்லாம் அழித்துக் கொண்டு, தன்மயராய் எழுந்து ஆனந்தித்ததை, நாமும் கடைத்தேறப் பாடுகிறார்.

பகவான் நல்லவர்களிடம் பேரன்பு பொழிகிறார். பக்கத்தில் வைத்துக் கொண்டு மிகவும் பரிவோடு அருள்கிறார். பகவானை நெருங்க நெருங்க, அமைதி பெருகும். உலகை உதாசீனமாகப் பார்ப்போம். நமது பெரிய பெரிய பிரச்சினைகளையும் அநாயாசமாக, பகவான் கையாள, அவரது திருவிளையாடலை நாம் ரசிக்கலாம்.

சரி, பொல்லாதவர்களின் கதி என்ன? நம்மைப் பகைப்பவர்கள், பொல்லாத்தனம் செய்பவர்கள் குறித்து நாம் எதுவும் செய்ய வேண்டாம்.

பகவான் பார்த்துக் கொள்வார். பகவானுக்கு நல்லவன் பொல்லாதவன் இல்லை. பொல்லாத வனுக்குப் பொல்லாத்தனம் செய்வார். பொல்லாதவன் போல் நடந்து கொள்ளும் பகவான், பொல்லாதவர்களையும்

*உண்மையில் நேசிக்கிறார். பகவானின் பொல்லாத்தனம் கூட, பொல்லாதவர் களுக்குக் காட்டும் பெருங் கருணைதான்.*

*நல்லவன், பொல்லாதவன் என்ற விமரிசனம் வேண்டாம். பகவானின் பெரு நட்போடு, பேரன்போடு, பேரருளோடு, பேரமைதியில் வாழ்வோம்.*

## 9. ஓர் திறமில்லான்

*பகவான் உடல் தாங்கி இருந்த காலத்தில், இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்திருந்தது. இந்துமதம் ஒரு மதமே அல்ல; இந்துக் கடவுள்கள் சாத்தான்கள் தான் என்ற ஆழ்ந்த அவர்களது மதக் கொள்கைகளின் அடிப்படையை மனப்பூர்வமாக நம்பியதோடு அந்தக் கருத்துகளை, சமரச மண்ணில் விஷ வித்துகளாய் வெள்ளையர்கள் விதைத்துக் கொண்டிருந்த காலம். இந்தக் கால கட்டத்தில் உலகத்துக்கே விடி வெள்ளியாய், ஆன்மீகப் பேரொளியாய் அவதரித்த நம் பகவானின் பேராற்றலை நான் வியந்து பார்க் கிறேன். இன்றும் கூட, ரமணாச்ரமத்தில் வெளிநாட்டவர்களைப் பார்க்கும்போது நான் ஆச்சரியமடைகிறேன்.*

*இன, மத வெறி பிடித்த இவர்களுக்கு எங்கிருந்து பகவானைப் பணியும் துணிவு வந்தது என்று அதிசயப்படுகிறேன்.*

*ஒரு திறமையும் இல்லாதவனா நம் பகவான்? ஒரு திறமை மட்டுமல்ல, பல திறமை உடையவனா நம் பகவான்? இல்லை, இல்லை, முருகனார் சொல்கிறார்:*

*நீங்கள் நினைத்துப் பார்த்து, பகவான் இப்படிப்பட்ட திறமைகள் உடையவன் என்று சொல்ல முடியாத அளவு, எல்லா ஆராய்ச்சிகளுக்கும் அகப்படாத பெருந்திறலான். பகவானால் இந்து மதம் நாளும் பொலிவு பெறுகிறது. வேதாந்தம் வீறு கொண்டு எழுகிறது.*

இறை அன்பு, இறை அருள், இறை ஆற்றல் இப்படி அப்படி என்று சொல்ல முடியாத அளவு எழுச்சி பெற்றுள்ளது. அத்வைதம், சுத்தமாய், தெளிவாய், அதிசயமாய், ஆனந்தமாய், அமைதியாய் பகவானின் பக்தர்கள் நெஞ்சில் நிறைந்து நிலைத்துள்ளது.

எத்திறத்தால் எண்ணுவார் எவ்வெவர்
மற்று அவ்வவர்க்கு அவ்
அத்திறத்தான் ஓர்திறமில்லான்.

*ஸ்ரீரமண ஞானபோதம் 1.198*


ஓர் திறம் இல்லான்: 1. ஒருதிறமையும் இல்லாதவன். 2. ஒரு திறமையல்ல, பல திறமைகள் உடையவன். 3. நினைத்துப் பார்க்க முடியாத பெரும் திறமை உடையவன்.

## 10. யானே யானாக இயல்வித்தோன்

நாம் நாமாக இருக்க முடிவதில்லை. வாழ்க்கை முழுவதும் Mere adjusting; சூழ்நிலைக்கேற்ப நம்மை மாற்றிக் கொள்வதும் சரிப்படுத்திக் கொள்வதுமாய்க் கழிகிறது. நினைத்துப் பார்த்தால் கேவலம்தான். நாம் நினைப்பதில்லை, அதனால் உறுத்தலும் இல்லை.

பகவான் சொல்கிறார்: “சீச்சீ! இதென்ன அவலம்; நீ நீயாக இரு. நீ உன் உண்மை இயல்போடு இரு. நீ ஆனந்தமாக வாழவேண்டியவன்; எதற்காக உன்னைச் சாதாரண மனிதனாகத் தாழ்த்திக்கொண்டு அல்லாடு கிறாய்? உன் எண்ணங்கள் இறை எண்ணங்களாகட்டும்; செயல்கள் இறைச்செயல்களாகட்டும். விடுதலை வாழ்வே உன் லட்சியமாகட்டும்”.

தேவாதி தேவன் நம் பகவான், நம்மைத் தன்னோடு இணைத்துக் கொள்வதன் முன், தன் இயலில் நம்மைப் பொருத்துகிறார். பகவானோடு, எண்ணத்தால், செயலால் ஒன்றுபடுவதன் மூலம், நாம் நம்மை இழந்து பகவானில் ஒன்றாகிறோம். நான் என்னும் இறை ரமணனாக நாம் ஆகிவிடுகிறோம்.



**“ரமணன் பெயர் நான்; என் பெயரும் நான் தான்; என்னை நானாகத் தன்னில் பொருத்தி, நான் நான் என்ற இறைப் பொதுப் பெயராக, தன்மையாக என்னைச் செய்து விட்டான்” என்று தன் இயல்பான தன்மையை வியந்து பாடுகிறார் முருகனார்.**

முருகனாரின் நோக்கம், நான் நானாயிருப்பேன் என்ற வாழ்வியலை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தான்.

*யானே யானாக இயல்வித்தோன் ஏகான்மா*
*தானே தானாம் தத்துவன்.*

*ஸ்ரீரமண ஞானபோதம் 1.200*

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### ஸ்ரீரமணாச்ரமம் நிர்மாண நூற்றாண்டு வைபவம் (1922-2022)

*2022 செப்டம்பர் முதல் தேதி தொடங்கி 28 டிசம்பர் 2023 வரையிலான 16 மாதங்களுக்கு ஸ்ரீ ரமண ஜெயந்தி கால அளவு அனுசரிக்கப் படுகிறது. ஸ்ரீ ரமணாஸ்ரமத் தலைவர் திரு. வெங்கட் S. ரமணன் அவர்கள் இந்த நூற்றாண்டு வைபவம் சம்பந்தமாக ரமண அன்பர்களின் மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறார். ஆலோசனைகளை <posrm@gururamana.org> என்னும் அவரது மின்னஞ்சல் முகவரிக்கு நேரடியாக அனுப்பலாம்.*

### ஸ்ரீமுருகனார் ஆராதனை

### (26-8-2022)

*ஸ்ரீ முருகனாரின் ஆராதனையை ஒட்டி 25/8/2022 மாலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் 'திருவாசகச் செம்மல்' சிவத்திரு மயிலை சத்குருநாத ஓதுவார் அவர்களால் 'ஸ்ரீ ரமண சந்நிதி முறை' பண்ணிசை பக்க வாத்தியங்களுடன் ஓதப்பட்டது. ஸ்ரீ ரமணாச்ரம நிறுவனத்தின் நூற்றாண்டுக் கொண்டாட்டங் களின் ஒரு அம்சமாக முருகனார் அருளிய 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' மற்றும் 'ரமண தேவமாலை' நூல்கள் பதம் பிரிக்கப்பட்ட பதிப்பாக ஆசிரமத் தலைவர் திரு. வெங்கட் S. ரமணன் அவர்களால் வெளியிடப்பட்டன. அத்துடன் சிவத்திரு சத்குருநாத ஓதுவார் அவர்கள் பாடிய அப்பாடல்களின் தொகுப்பு முழுவதும் அடங்கிய ஒலிப்பதிவும் ஆச்ரம தலைவர் அவர்களால் வெளியிடப்பட்டது.*

*மறுநாள் 26/8/2022 ஸ்ரீ முருகனாரின் ஆராதனை நாள் அன்று, அன்னாரின் சமாதி லிங்கத்திற்கு அபிஷேக ஆராதனை நடைபெற்று, திரளாகக் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீ ரமண சந்நிதிமுறைப் பாராயணமும் நடைபெற்றது. திரளாக*



ஆச்ரம தலைவர் திரு. வெங்கட் *S.* ரமணன் அவர்கள்
திருவாசக செம்மல் மயிலை சத்குருநாத ஓதுவார் அவர்கள்
பாடிய ‘ஸ்ரீரமண சந்நிதிமுறை’ அடங்கிய *pen drive*
ஆச்ரமத்தில் வெளியிட்டார்



முருகனார் இயற்றிய ‘ஸ்ரீரமண சந்நிதிமுறை’
முழுவதும் பாடி ஒலிப்பதிவு செய்த ‘திருவாசக
செம்மல்’ மயிலை சத்குருநாத ஓதுவார்

*அன்பர்கள் பங்கேற்ற இவ்விழாவில் ஆசிரமத் தலைவர் மற்றும் திருமதி சுசீலா மன்னி அவர்களும் பங்கேற்றனர்.*

## அருணை விஜய தினம்

## (01-9-2022)

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் மதுரையிலிருந்து புறப்பட்டு அருணையை அடைந்த தினத்தின் (செப்டம்பர் 1. 1896) நூற்றாண்டு விழா வருடமான 1996-ஆம் ஆண்டு முதல் மதுரை அன்பர்கள் ஒவ்வொரு வருடம் செப்டம்பர் முதல் தேதி திருவண்ணாமலை அடைந்து ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் அருணை விஜய விழாவில் கலந்து கொள்கின்றனர்.*

*இந்த வருடமும் காலை 5.30 மணிக்கு பகவான் சன்னதியில் பாராயணம், அண்ணாமலையார் கோவிலில் சுவாமி தரிசனம் முடிந்தபிறகு அண்ணாமலையை நோக்கி அக்ஷரமணமாலை பாராயணம் என்று ரமணானந்தத்தில் திளைத்தனர்.*

*பிறகு அன்பர்கள் திரளாகக் கிரிவலம் புறப்பட்டனர். அருணை விஜய விழாவிற்கான ஏற்பாடுகளை ஆஸ்ரம நிர்வாகத்தினர் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.*

## நவராத்திரி விழா
## (26-9-2022 முதல் 4-10-2022)

*ஆச்ரமத்தில் இந்த வருடம் நவராத்திரி விழா 25-9-2022 அன்று கர்பகிருஹத்திலிருந்து ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு கொலு மண்டபத்தில் வீற்றிருந்தாள். 29-9-2022 அன்று மீனாட்சி அலங்காரத்துடன் துவங்கி 4-10-2022 மகிஷாசுரமர்தினி அலங்காரத்துடன் விழா நிறைவு பெற்றது. வெற்றிவாகைத் திருநாளாம் விஜயதசமியன்று யோகாம்பிகை அன்னை மீண்டும் கர்பகிருஹத்தில் புகுந்தாள். நவராத்திரி விழா ஒன்பது நாட்களும் ஆச்ரம YouTube-இல் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.*

*ஆச்ரமத்தில் முன்னர் நடந்த விழாக்களின் காணொலியையும், இனிவரும் விழாக்களின் நேரடி ஒளிபரப்பையும் ஆச்ரம YouTube Channel <https://www.*



*youtube.com/c/SriRamanasramam>-இல் காணலாம். ஆச்ரம YouTube Channel-க்கு Subscribe செய்து நிகழ்வுகளை முன்கூட்டியே அறியுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

## ரமண கேந்திர செய்திகள்

### ஸ்ரீரமண கேந்திரம், மைலாப்பூர், சென்னை

**தினசரி நிகழ்வு ...**

*காலை 09.00 – 10.30 வேதபாராயணம், பூஜை.*

*மாலை 05.00 – 06.00 வேதபாராயணம்*

*மாலை 06.00 – 07.00 தமிழ்ப் பாராயணம் (திங்கள் – சனிக்கிழமை )*

**பிரதி மாதம் ....**

*முதல் ஞாயிறு மாலை 06.00 – 07.00 சிறப்பு பஜனை /பாராயணம் மயிலை ஸ்ரீகாந்த் மற்றும் அன்பர்கள்*

*இரண்டாம் ஞாயிறு மாலை 06.00 – 07.00 Dr. S. ராம் மோஹன், சொற்பொழிவு*

*மூன்றாம் ஞாயிறு மாலை 06.00 – 07.00 எழுத்தாளர் கிருஷ்ணா, சொற்பொழிவு*

*நான்காம் ஞாயிறு மாலை 06.00 – 07.00 P. தியாகராஜன், சொற்பொழிவு*

*புனர்வசு அன்று முற்பகல் சிறப்பு வழிபாடு, அன்னதானம்.*

*பௌர்ணமி மற்றும் பிரதோஷகால சிறப்பு வழிபாடு மாலை 04.30 – 06.00.*

## ஸ்ரீமுருகனார் மந்திரம், ராமநாதபுரம்

*ஸ்ரீரமணாச்ரமத்திற்குப் பாத்தியப்பட்ட, ஸ்ரீமுருகனார் பிறந்த இல்லமான ராமநாதபுரம் முருகனார் மந்திரத்தில் வழக்கம்போல் இவ்வாண்டும் முருகனார் ஆராதனை 28 ஆகஸ்ட் அன்று சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.*

*தாயுமானவர் தபோவனம் சுவாமி ருத்ரானந்தா மகராஜ் சிறப்பு உரையாற்றினார். Dr. சந்திரசேகரன் மற்றும் ராமநாதபுரம் பிரம்ம குமாரிகள் இயக்கத் தலைவி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

---

Ramanodhayam — Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



ஸ்ரீ ரமணாச்ரமம் நவராத்திரி விழா –
அன்னை யோகாம்பாள் ஊர்வலமாக

100 YEARS

1922 - 2022

SRI RAMANASRAMAM
TIRUVANNAMALAI

CENTENARY
CELEBRATIONS

செப்டம்பர் 1, 2022 (அருணை விஜய தினம்) முதல்
டிசம்பர் 28, 2023 (பகவானது 144-ஆவது ஜயந்தி)
வரையிலான 16 மாதங்கள்
ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா வைபவமாகக்
கொண்டாடப்படுகின்றது.

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

